# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 19 ★ 31.03.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ✉ ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




## சட்டநாயகன் வழியில் சிறப்பு அதிரடிப்படை வேண்டும். அடம்பிடிக்கும் கூட்டமைப்பினர்

கணிதன்



## விண்வெளிப்போருக்கு பின்னுள்ள பூகோள அரசியலை உள்வாங்க தமிழினம் தயாராகுமா?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்



## ஜெனீவா 2019

நிலாந்தன்



## தமிழர்களின் உரிமைக்கான குரலை சுமந்தின் நசுக்குகிறார்.

அனந்தி சசிதரன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்.

## ரணிலின் எதிரொலி தான் சுமந்திரன்

தோழர் தியாகு



# கால அவகாசத்திற்கு அர்த்தம் கற்பித்த கூட்டமைப்பு அமைதி காப்பது ஏன்? தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கேள்வி

பொறுப்புக்கூறலை செய்யவே மாட்டோம் என்று அரசாங்கத்தலைவர்களும் பிரதிநிதிகளும் ஜெனீவா கூட்டத்தொடர் நிறைவடைந்ததன் பின்னர் பகிரங்கமாகவே அறிவித்துள்ள நிலையில் கால அவகாசத்திற்கான அங்கீகாரத்தினை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்ப்புக்களை தாண்டியும் ஆணைபெற்றவர்கள் என்ற மமதையில் வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைதி காப்பது ஏன்? என்று தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதுதொடர்பில் தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரின்போது ஆணையாளரின் அறிக்கையை நிரகாரித்த இலங்கை




அரசாங்கத்திற்கு பொறுப்புக்கூறலுக்கான கால அவகாசம் வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களின் ஆணைபெற்றவர்கள் என்ற ரீதியில் இந்த முடிவினை எடுப்பதற்கான முழுமையான உரித்தும் தமக்கே என்று பொறுப்பேற்றுக் கொண்டிருந்த கூட்டமைப்பு கால அவகாசத்தினை வழங்கவில்லை. சர்வதேச மேற்பார்வைக்கான கால நீடிப்பினையே வழங்கியுள்ளோம். இதன்மூலம் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தின் பிடிக்குள் சிக்கவைக்கப்பட்டுள்ளது என்று சர்வதேசத்தில் இலங்கை அரசாங்கத்தினை பிணை எடுத்ததற்கு அர்த்தம் கற்பித்தார்கள்.

ஆனால், ஜெனீவா அரங்கு நிறைவடைந்தவுடன், இணை அனுசரணைக்கான ஆவணத்தில் கைச்சாத்திட்டமை எனக்குத் தெரியாது என்று தடாலடியாக கூறினார் சனாதிபதி மைத்திரி. யார் என்ன சொன்னாலும் சர்வதேசத்தினை நீதிவிசாரணையினை உள்வாங்கவே போவதில்லை என்று பதிலளித்தார் பிரதமர் ரணில். இதனைவிட ஜெனீவா சென்ற அரச தூதுக்குழுவின் பிரதிநிதிகளான அமைச்சர் திலக்மாரப்பன, பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

## விடுதலைப்புலிகளும் போர் விதிகளை மீறியுள்ளனர் தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு




இறுதியில் சிறிலங்கா இராணுவம் மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் புலிகளும் போர் குற்றங்களை செய்துள்ளமையினாலேயே உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும். என தாம் கேட்பதாக சிறிலங்கா அரச ஆதரவு நாடமாளுன்ற உறுப்பினா எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

மேலும், இந்த விடயத்தில் உண்மை நிலவரம் சர்வதேச விசாரணையின் ஊடாகவே வெளிவரும் என்றும் அவர் கூறினார். கொழும்பில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், “இரண்டு தரப்பினரும் குற்றமிழைத்துள்ள நிலையில், ஏன் ஒரு தரப்பினர் மீது மட்டும் குற்றம் சுமத்த வேண்டும் என்று கேள்விகள் எழுந்துள்ளன. அது சரியானது, நான் இதனை ஏற்றுக்கொள்கிறேன்.

ஒரு அறிக்கையில், இராணுவத்துக்கு எதிராக 5 குற்றங்களும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக 6 குற்றங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதாவது, சர்வதேச போர் விதிகளை மீறியதாகவே இந்தக் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் விடுதலைப் புலிகளின் ஒரு சில தலைவர்களது பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனாலேயே, நாம் உண்மை அறியும் ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். இதன் ஊடாக உண்மை வெளிவந்தால் பாதிக்கப்பட்ட இரண்டு தரப்பினரும், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக தீர்வொன்றை மேற்கொள்ள முடியும். இந்த குற்றச்சாட்டானது இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானது என தமிழர்கள், நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இது அப்படியானதல்ல. உண்மை வெளிவந்தால் மட்டுமே யார் குற்றவாளிகள் என்பதை அறிந்து கொள்ள முடியுமாக இருக்கும். இதனை நாம் வடக்கிலும் தெரிவித்துள்ளோம். யுத்த காலத்தின்போது பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளமை உண்மையான ஒரு விடயமே.

## இறுதி யுத்தத்தில் உறவுகள் கையளிக்கப்பட்ட இடமான முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தடியில் கவனயீர்ப்பு நிகழ்வு

### முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அழைப்பு

இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் சர்வதேச சமூகத்தினையும் சர்வதேச போர் விதிமுறைகளிலும் நம்பிக்கை வைத்து இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே என்ற தொனிப்பொருளில் மேற்படி கவனயீர்ப்பு நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

தாயகத்திலே திட்டமிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் உலகநாடுகள் கவனத்தினை ஈர்க்கும் அதேவேளை சர்வதேச விசாரணை மூலம் மட்டுமே காணாமல் ஆக்கப்பட்ட பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கவும் வலியுறுத்தும் விதமாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தொடங்கும் பேரணி இறுதி யுத்தத்தில் போராளிகள் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட வட்டுவாகல் பாலத்தடியில் நிறைவு பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை கடந்த காலங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திய போராட்டத்தின் வலிசுமந்த ஒளிப்படங்களை தாங்கி உதிரிப் பூக்கள் என்ற ஒளிப்பட அல்பம் அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுயாதீன ஊடக வியலாளர் க.குமணன் என்பவரால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிபோரின் போது தங்கள் உறவுகளை படையினரிடம் கையளித்த இடமான வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் ஒளிப்பட கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு தவறு செய்திருக்கிறோம் என்பதை தெற்கில் உணர்ந்து கொண்டு ஒரு தீர்வுக்கு வர வேண்டும்

### தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன்

எதிர்வரும் அதிபர் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்குவதற்கு, மூன்றாம் தரப்பு நடுநிலையை தமிழர்கள் கோருவதாக, வடக்கு, கிழக்கு மக்களுக்கு தவறு செய்திருக்கிறோம் என்பதை தெற்கில் உணர்ந்து கொண்டு ஒரு தீர்வுக்கு வர வேண்டும் என்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தரப்பு நடுநிலையாளராக இந்தியாவுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் அவர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குக் கூறியுள்ளார். “இந்த தீர்மானத்துக்கு வரும் எந்தவொரு அணியுடனும் நாங்கள் நிச்சயமாக இணைவோம்.



எந்தவொரு தீர்வும் தெற்கில் இருந்தே வரைய வேண்டும். சட்டப்பூர்வமாக எங்களுக்கு என்ன தேவை என்று மட்டும் நாங்கள் கேட்கலாம்.

இந்திய - சிறிலங்கா உடன்பாட்டில், 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக எங்களின் சார்பாக இந்தியா கையெழுத்திட்டது. இந்தியா எமது நெருங்கிய அயல் நாடு. இந்தியா


தொடர்ச்சி 10ஆம் பக்கம் →

# சித்திரவதைக்கு எதிரான ஐ.நா குழு சிறிலங்கா வருகிறது

சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐ.நா உபகுழு அடுத்த வாரம் சிறிலங்காவுக்கான முதலாவது பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. ஏப்ரல் 2ஆம் நாள் தொடக்கம், 12 ஆம் நாள் வரை இந்தக் குழு சிறிலங்காவில் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் சித்திரவதைக்கு எதிரான மற்றும் மோசமான நடத்தைக்கு எதிரான பாதுகாப்பு குறித்து இந்தக் குழு ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது. நான்கு பேர் கொண்ட ஐ.நா உபகுழு இந்தப் பயணத்தின் போது, அரசாங்க அதிகாரிகளுடனும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகளுடனும் கலந்துரையாடவுள்ளது. மோல்டோவா நாட்டைச் சேர்ந்த விக்டர் சகாரியா தலைமையிலான இந்தக் குழுவில், மொறிசியசை சேர்ந்த சத்யபூசண் குப்தா டோமா, சைப்ரசை சேர்ந்த பெட்ரோஸ் மைக்கலிடேஸ், பிலிப்பைன்சை சேர்ந்த ஜூன் லொபீஸ் ஆகியோரைக் கொண்ட குழுவே சிறிலங்கா வரவுள்ளது.

# மன்னாரில் கடற்பரப்பில் இருஎரிவாயு, இரு எண்ணெய் படிமங்கள் கண்டுபிடிப்பு




மன்னார் கடற்பரப்பில் இரண்டு எரிவாயு படிமங்களும், இரண்டு எண்ணெய்ப் படிமங்களும், கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, சிறிலங்காவின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், 'இரண்டு எரிவாயுப் படிமங்களிலும், 9 ட்ரில்லியன் கன அடி எரிவாயுவும், இரண்டு எண்ணெய்ப் படிமங்களிலும், 2 பில்லியன் பரல் எண்ணெயும் இருப்பது ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு எரிவாயுப் படிமங்களில் சிறியதான டொராடோ படிமத்தில் இருந்து 350 பில்லியன் கன அடி இயற்கை எரிவாயுவைப் பெற முடியும். இதன் மூலம், 350 மெகாவாட் மின் நிலையத்தை 10 ஆண்டுகளுக்கு இடைவிடாமல் இயக்க முடியும். இரண்டாவது எரிவாயுப் படிமத்தில், 1000 பில்லியன் கன அடி இயற்கை எரிவாயு இருக்கக் கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இயற்கை எரிவாயுவை முதலில் மின் உற்பத்திக்கும், பின்னர் உள்நாட்டு தேவைக்கும் பயன்படுத்த முடியும். இந்த இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் ஆய்வு அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். பகிர்வு அடிப்படையில் உற்பத்தி செய்யத் தயாராக உள்ள முதலீட்டாளருடன் இது தொடர்பான உடன்பாடு கையெழுத்திடப்படும். ஏற்கனவே, 12 முதலீட்டாளர்கள் விண்ணப்பித்துள்ளனர்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பௌத்த மாநாடு நடத்தப்பட்டமை, ஜனாதிபதியை திருப்திபடுத்தவே சுரேஸ் பிரேமசந்திரன்



வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் வவுனியாவில் பௌத்த மாநாடு நடத்தப்பட்டமை, ஜனாதிபதியை திருப்திபடுத்தவேயென ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கில் நல்லுணர்வு பேணப்பட வேண்டுமென்றால் அங்கு காணிகள் அபகரிக்கப்பட்டு, பௌத்த கோயில்கள் அமைக்கப்படுவது தடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழில் இன்று (சனிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர், "வடக்கு கிழக்கு பௌத்தமயமாக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு தமிழர்களின் கோயில்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. பௌத்த சின்னங்கள் காணப்படுவதாக கூறி பல இந்து கோயில்கள் அழிக்கப்பட்டு அங்கு பௌத்த ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் வடக்கில் நல்லுணர்வு பேணப்பட வேண்டுமென வலியுறுத்தி பௌத்த மாநாடு நடத்தப்பட்டது. ஆனால், வடக்கில் நல்லுணர்வு பேணப்பட வேண்டுமென்றால் வடக்கு கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டு பௌத்த கோயில்கள் அமைக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நேற்றைய மாநாட்டில் ஒரு முடிவு எட்டப்பட்டிருந்தால் அதில் அர்த்தம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு எதுவும் இல்லாமல் இந்த மாநாட்டை நடத்தியது ஜனாதிபதியை திருப்திபடுத்தவே என எண்ணத் தோன்றுகிறது" என அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இறுதி அஸ்திரமும்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி நடைபெறுகின்றது. இந்த வரவு செலவுத்திட்டமே தற்போதைய ஆட்சியாளர்களின் இறுதி வரவு செலவுத்திட்டமாக உள்ளது. இதற்கு அடுத்ததாக பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நிறைவுக்கு வரவுள்ளதால் பாராளுமன்றத் தேர்தலொன்றே இடம்பெறவுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் வெற்றி பெறுவதற்கு ஐக்கிய தேசிய தலைமையிலான அரசாங்கத்திற்கு பல்வேறு நெருக்கடிகள் காணப்பட்டுக் கொண்டிருந்தன. இருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'சனநாயகம்' என்ற போர்வைக்குள் இருந்து கொண்டும் மேற்குலத்தின் நிகழ்ச்சி நிரலிலிருந்து கொண்டும் ஐ.தே.க தலைமையிலான ஆட்சியை அமைப்பதற்கு நீதிமன்றம் வரையில் சென்று எவ்வாறு உதவியதோ அதேபோன்று அமைக்கப்பட்ட ஆட்சியை தக்கவைப்பதற்கு காட்டிய பிரயத்தனத்தினால் அந்த நெருக்கடிகள் நீங்கியுள்ளன.

2015ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டுவரையில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு வரவுசெலவுத்திட்டத்திற்கும் முந்திக்கொண்டு சென்று நிபந்தனையற்ற ஆதரவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியிருந்தது. புதிய அரசியலமைப்புக்கான பணிகள் தடைப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே ஆதரவளிக்கின்றோம் என்றும் தனது செயற்பாட்டிற்கு கூட்டமைப்பு அர்த்தம் கற்பித்திருந்தது.

மேலும் குறித்த காலப்பகுதியில் இறுதி வாக்கெடுப்பிற்கு முன்னதாக மட்டும் அரச தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி நிபந்தனைகளை விதித்தே ஆதரவளிப்பதாக பிரச்சாரப்படுத்தி மக்களுக்கு காட்சிப்படுத்தினாலும் உண்மையில் அவ்வாறான எந்த வலிந்த செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை என்பதை கூட்டமைப்பின் தலைமையின் மனச்சாட்சி நன்கு அறியும்.

இவ்வாறிருக்க, தற்போது கூட்டமைப்பே அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்று ஏற்றுக்கொண்டிருக்கின்றது. எதற்காக முண்டு கொடுக்கின்றீர்கள் என்ற கேள்வி ஜெனீவா அமர்வுக்கு பின்னரான சூழமைவுகளில் தமிழ் மக்களிடத்திலிருந்து வெகுவாக வலுத்து வருகின்றது. ஆனால் அதற்கு பொறுப்பான பதிலளிப்பதற்கு கூட்டமைப்பின் சார்பில் யாரும் இல்லை.

அகத்தில் ஒன்றும் புறத்தில் பிறிதொன்றும் வைத்து செயற்பட்டால் பதிலளிக்க முடியாத தர்மசங்கடமான நிலைமைகள் ஏற்படுவதுண்டு. அதுவொருபுறமிருக்க தற்போது இறுதி சந்தர்ப்பமொன்று கிடைத்துள்ளது. சரணடைந்தவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு என்ன நிகழ்ந்தது, போர்க்குற்றங்கள், சிங்கள பௌத்தமய ஆக்கிரமிப்புக்கள் என எதனையும் கட்டுப்படுத்துவதற்கு பேரம்பேசும் சக்தியை பயன்படுத்த திராணியில்லாது விட்டாலும் ஆகக்குறைந்தது தசாப்தங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையையாவது முன்னிலைப்படுத்தி நிபந்தனையை விதிக்க முடியுமல்லவா?

தற்போதைய வரவு செலவுத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு மட்டுமே சிங்கள பெருந்தேசிய ஆட்சியாளர்களுக்கு தமிழர் தரப்பினது ஆதரவு தேவையாகவுள்ளது. எதிர்காலத்தில் தமிழர் தரப்பின் தேவையை இல்லாது போகச் செய்தற்கான அத்தனை விடயங்களையும் பெருந்தேசியவாதிகள் செய்துவிட்டனர். இந்நிலையில் புதிய ஆட்சி ஏற்பட்டவுடன் எதிர்க்கட்சித்தலைமை பதவி பறிக்கப்பட்டு 'கறிவேப்பிலையாக பயன்படுத்தப்பட்டுள்ளோம்' என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள கூட்டமைப்பு தீர்க்கமான தீர்மானமொன்றை எடுப்பதற்கான இறுதிச்சந்தர்ப்பம் இதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்திலாவது ஆத்ம திருப்திக்காக பாதிக்கப்பட்ட தமிழனத்தின் ஆணையின் நிமித்தம் செயற்பட வேண்டியது கூட்டமைப்பின் தார்மீக கடமையாகின்றது. அதற்காக தன்னிடத்தில் உள்ள இறுதி அஸ்திரத்தினை சரணாகதியடையாது பயன்படுத்துமா? என்பதே இப்போதைய கேள்வியாகின்றது!

# தமிழர்களை அழிப்பதில் சிங்கள தலைவர்கள் ஒற்றுமையாக செயற்படுகின்றனர்

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் லீலாதேவி



தமிழர்களை அழிப்பதில் சிங்கள தலைவர்கள் ஒற்றுமையாக செயற்படுவதாக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் லீலாதேவி தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழ் தலைவர்கள் அவ்வாறு ஒற்றுமையாக செயற்படாமையினாலேயே தமிழர்களுக்கான தீர்வு இதுவரையில் எட்டப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையாக இருந்திருந்தால் ஜெனீவாவில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கமாட்டாது.

பாதிக்கப்பட்ட மக்கள் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கான காரணங்களை சர்வதேச நாடுகளுக்கு தமிழ் தலைவர்கள் வெளிப்படுத்தியிருந்தால் எமக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது. எமது விடயத்தில் இனியாவது தமிழ் தலைமைகள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலனறுவையில் தமிழர் மீது சிங்களவர்கள் தாக்குதல்

இது எங்களுடைய நாடு இங்கு உங்களுக்கு என்ன வேலை? என கேட்டு பொலனறுவை சிறைச்சாலையில் கடமையாற்றும் தமிழ் உத்தியோகத்தர் மீது சிங்கள உத்தியோகத்தர்கள் 4 பேர் இணைந்து தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

மதுபோதையில் இருந்த பெரும்பான்மையின சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நான்கு பேர் இணைந்து நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இரவு இந்த தாக்குதலை மேற்கொண்டதாக பொலனறுவை காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தினைச் சேர்ந்த பி.பத்மகம்சன் என்னும் சிறைச்சாலை உத்தியோகத்தரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளதுடன் அவர் இன்று வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். 'இது எங்கட நாடு இங்கு உங்களுக்கு என்னடா வேலை' என்று கேட்டு கேட்டு தன்னை தாக்கியதாகவும் தனது மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியுள்ளதாகவும் காயமடைந்த பத்மகம்சன் தெரிவித்தார். பொலனறுவை சிறைச்சாலையில் கடமையாற்றும் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு பெரும்பான்மை உத்தியோகத்தர்கள் பலகாலமாக அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு எம்.பிகளின் வங்கிக் கணக்கிற்கு மாதம் இரண்டு இலட்சம் ரூபா



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற அலுவலகத்தினால் வழங்கப்படும் சம்பளம், எரிபொருள் கொடுப்பனவு மற்றும் இதர படிகளுக்கு மேலதிக கொடுப்பனவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மாதந்தோறும் இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றமை அம்பலமாகியுள்ளது.

கம்பரெலிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக இக் கொடுப்பனவு இலங்கை அரசின் ஆளுங்கட்சி உறுப்பினர்களான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அக்கொடுப்பனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றமை அம்பலமாகியுள்ளது.

குறித்த கொடுப்பனவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கடந்த வருடம் வெளியேறியிருந்த ஈபிஆர்எல்எவ் நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தனுக்கு வழங்கப்படுவதில்லை என்ற தகவலும் தெரிய வந்துள்ளது. இதேவேளை குறித்த இக்கொடுப்பனவு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. கம்பரெலிய திட்டத்திற்கென திட்டத்தை நடைமுறைப்படுத்த பிறிதாக நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்படுகின்ற போதிலும் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு என்னும் பெயரில் குறித்த கொடுப்பனவினை ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அவர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் மாதந்தோறும் பெற்று வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களுக்கும் கடந்த மாதக் கொடுப்பனவு அவர்களது வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் இந்த மாதக் கொடுப்பனவும் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தேர்தலை நோக்காகக் கொண்டு ஆளும் கட்சியினால் முன்னெடுக்கப்படும் கம்பரெலிய திட்டத்தில் கடந்த ஒக்ரோபரில் மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து ரணில் அரசாங்கத்தைக் காப்பாற்றியதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் தியாக தீபம் அன்னை பூபதியின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



தியாக தீபம் அன்னை பூபதியின் 31ஆவது ஆண்டு நினைவேந்தலின் 7ஆம் நாள் நிகழ்வு மட்டக்களப்பில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள குருந்தையடி முன்மாதிரி கிராமத்தில் கடந்த (புதன்கிழமை) இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் அன்னை பூபதியின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரின் நினைவாக 10 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி இந்திய இராணுவத்திற்கு எதிராக மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்த அன்னை பூபதி ஏப்ரல் 19ஆம் திகதி உயிர்நீத்தார்.

இந்நிலையில், அன்னை பூபதியின் 31ஆவது நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்த நாளான 19ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி அந்த நினைவு தினத்தை ஆரம்பித்து ஒவ்வொரு கிராமத்திலும் நினைவேந்தல் நடத்தி வருகின்றது. அந்தவகையில் கட்சியின் செயற்பாட்டாளர் யோகன் தலைமையில் ஏழாவது நாள் நினைவேந்தல் நேற்று மட்டு. மண்முனையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் இன்று அதிகாலை நடந்த கோரம்! கணப்பொழுதில் நடந்த பரிதாபம்

யாழ்ப்பாணம் - மீசாலை - புத்தூர் வீதி - மட்டுவில் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதோடு, மூவர் படு காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். கிடுகு ஏற்றியவாறு பயணித்த லாண்ட்மாஸ்ரருடன் பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியதாலேயே விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில், விசுவமடுவைச் சேர்ந்த 24 வயதுடைய ரஜீவன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதன வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதரா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# தமிழர்களின் உரிமைக்கான குரலை சுமந்திரன் நசுக்குகிறார்.

**ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயலாளர் நாயகமும் வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான அனந்தி சசிதரன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்.**



**கேள்வி:-ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமையை கூட்டமைப்பின் பேச்சாளர் சரியான முடிவு என்று கூறுகின்றமை பற்றி?**

பதில்:- 2015ஆம் ஆண்டு ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அந்த தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று தான் இந்த சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்தார். 2017இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் கூட இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட விடயங்களை முன்னெடுப்பதற்கு கால அவகாசம் வழங்கப்படுவதாகவே கூறினார். ஆனால் தற்போது அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக எதனையுமே முன்னெடுக்கவில்லை என்பதை சாதாரண பொதுமகனும் அறிந்ததன் பின்னர் கால அவகாசம் அல்ல சர்வதேச மேற்பார்வைக்கான கால நீடிப்பு என்று வார்த்தைஜாலம் காட்ட விளைகின்றார்.

இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களில் வலிகளை அறியாத சுமந்திரன் தான் முண்டு கொடுப்பதாக கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கத்தினை தொடர்ந்தும் பாதுகாப்பதனையே பிரதான இலக்காக கொண்டிருக்கின்றார். தம் உயிர்களை ஈகம் செய்து ஆகுதியான விடுதலை வீரர்கள் வேட்கையை பயன்படுத்தியும் பாதிக்கப்பட்ட பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை முன்னிலைப்படுத்தி பசப்பு வார்த்தைகளையும் பயன்படுத்தி மக்கள் ஆணையைப் பெற்றார். அத்தகையவர் தற்போது கொள்கை வழி தவறிய பயணத்தினை முன்னெடுத்து கொண்டிருக்கும் சுமந்திரன் ஆணைபெற்றவர்கள் என்ற மமதையில் தான் ஏற்றுள்ள பணிகளான தமிழ்த் தேசிய நீக்கம், உரிமைக்கான குரல்களை நசுக்குதல், நீதிக்கான போராட்டத்தினை நீர்த்துப்போகச் செய்தல், ஆகியவற்றைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றார்.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிப்பதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டது. இலங்கை திரும்பிய ஜெனீவாவுக்கான அரச தூதுக்குழுவின் உறுப்பினர்கள் 30:1 இன் பிரகாரம் நீதிவிசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள், சட்டத்தரணிகள், கண்காணிப்பாளர் ஆகியோரை உள்ளீர்க்கப்போவதில்லை என்று கூறியுள்ளார்கள். சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ஆகியோர் ஜெனீவா விடயத்தில் ஏக நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஆனால் கால நீடிப்புக்காக தர்க்கம் புரிந்து ஊடக அறிக்கைகளை வெளியிட்டு அதற்கும் அப்பால் அவசர அவசரமாக ஜெனீவா சென்று சந்திப்புக்களை நடத்திய சுமந்திரன் கண்துடைப்புக்காக பாராளுமன்றில் ஒரு உரையை ஆற்றிவிட்டு தற்போது அமைதியாகிவிட்டார். இதிலிருந்து இவர் போன்றவர்கள் யாரின் பின்னணியில் இருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது அல்லவா? தமிழர்களின் துர்ப்பாக்கிய நிலைக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் இவர்களே.

**கேள்வி:- இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமையானது தமிழ் தாயகத்தில் கட்டமைப்பு ரீதியான இனஅழிப்பையே ஊக்கப்படுத்துமென தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் எதிர்வுகூறலை எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில்:- இதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. 2009இல் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்த சிங்கள பௌத்த மயமாக்கல் கடந்த பத்து வருடங்களில் நாவற்குழியை கடந்து வந்து விட்டது. நிலைகொண்டிருக்கும் படையினர்கள் ஒரு அங்குலம் கூட நகராதவாறு நிரந்த முகாம்களை உறுதியாக அமைக்கின்றனர். வனபாதுகாப்பு திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி, கிராம சக்தி, வீடமைப்பு என்பன உள்ளிட்ட பாரிய அபிவிருத்தி திட்டங்கள் என ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. அரச துறையில் உயர் நிலை முதல் கடை நிலை ஊழியர்கள் வரையில் தென்னிலங்கையில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றனர்.




ஆட்சியாளர்கள் எங்களின் முண்டிலேயே இருக்கின்றார்கள் என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறுபவர்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு திராணியற்ற நிலையில் இருப்பது ஏன் என்பது தான் மிக முக்கிய வினாவாகின்றது. அப்படியென்றால் தமிழ் மக்களின் ஆணையைப்பெற்ற பின்னர் அந்த இனத்தினை அழிக்கும் தென்னிலங்கையின் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு துணைபோகின்றார்கள் என்றுதானே பொருள் கொள்ள வேண்டியிருக்கின்றது. அரசியல் தீர்வு வரும் வரும் என்று மக்களினை போலியாக ஏமாற்றும் கூட்டமைப்பு ஒரு கதைக்கு இந்த ஆட்சியாளர்களிடத்திலிருந்து அவ்வாறான எச்சசொச்ச தீர்வொன்று கிடைத்தால் ஆகக்குறைந்தது கட்டிய விகாரைகளும், வைக்கப்பட்ட புத்தர் சிலைகளும் அகற்றப்படும் என்பதற்கு வகைபொறுப்பினைக் கூறமுடியுமா? ஆகவே நடப்பதையே தடுப்பதற்கு திராணியற்றவர்களிடத்தில் நேர்மையான உரிமைகளை, நீதியை, நியாயத்தினை, பாரம்பரிய கோட்பாடுகளை பாதுகாப்பாளர்கள் எமது அபிலாசைகளைப் பெற்றுத்தருவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்.

**கேள்வி:- தமிழ்த் தேசிய நீக்கத்தில் கூட்டமைப்பு ஈடுபவதாக கூறும் நீங்கள் அதற்கு மாற்றாக விக்கினேஸ்வரன் தலைமையில் உருவாகும் கூட்டணியும் வினைத்திறான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தாமதங்களை கொண்டிருப்பதாக கூறப்படுகின்றதே?**

பதில்:- மாற்றுக்கூட்டமைப்புக்கான செயற்பாடுகளில் சில தாமதங்கள் இருப்பதை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் மக்களுக்கான சிறந்த கட்டமைப்பைக் கொண்டதும், கொள்கையில் பற்றுறுதியுடனும் அக்கூட்டணி அமைய வேண்டும் என்பதே என்னுடையதும் பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. தமிழ்த் தேசியக் கொள்கையிலிருந்து கூட்டமைப்பு விலகிய நிலையில் தமக்காக யார் இருக்கின்றார்கள் என்ற அங்கலாய்ப்பில் இருந்தபோது விக்கினேஸ்வரன் ஐயா தான் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காக இருப்பேன் என்று உரைத்து அரசியல் தளத்தில் காலூன்றினார். அவர் அளித்த நம்பிக்கையும் வாக்குறுதியையும் நிச்சயம் காப்பாற்றுவார் என்பதில் எமக்கு நம்பிக்கை உள்ளது. கொள்கையின் பால் நாம் அவரின் தலைமைத்துவத்தின் கீழான பயணத்தினை மக்களுக்காக முன்னெடுப்போம். சரியான தருணத்தில் கூட்டணி உள்ளிட்ட இதர விடயங்கள் பகிரங்கமாகும்.

**கேள்வி:- தாயகத்திலே பெண்களின் அரசியல் பங்களிப்பு குறித்து தங்களின் கருத்து?**

பதில்:- எமது தாயக விடுதலைப்போராட்டத்திலே பெண்களின் சரித்திர வெற்றிகளை உலகமே அறியும். 2009 பின்னரான இன்றைய சூழலில் எமது உரிமைப்போராட்டத்தினை உயிர்ப்புடன் கொண்டு செல்வதில் பெண்களின் பங்களிப்பே அதிகமாகவுள்ளதை போராட்டக்களங்களில் நீங்கள் காணமுடியும். ஆனால் அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு தமிழ் தலைமைகள் தயாரில்லை என்பதே யதார்த்தம். என்னைப் பொறுத்தவரையில் பெண்கள் எதிர்நோக்கும் சகல அடக்குமுறைகள் நெருக்கடிகளிலிருந்து தற்பாதுகாத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு பெண்களும் அரசியலில் கால் பதிக்கவேண்டும்.



# சட்டநாயகன் வழியில் சிறப்பு அதிரடிப்படை வேண்டும் அடம்பிடிக்கும் கூட்டமைப்பினர்.

கணிதன்

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள் வென்றெடுக்கப்படும்வரை அரசாங்கத்தில் பங்கேற்பதில்லை, அரசாங்க சலுகைகளைப் பெற்றுக்கொள்வதில்லை. சுதந்திர தினம் உள்ளிட்ட அரசாங்க நிகழ்வுகளில் கலந்துகொள்வதில்லை என்று கொள்கை முடிவெடுத்திருந்த தமிழரசுக் கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இன்று மத்தியில் நிழல் அமைச்சர்களாகச் செயற்படுவதுடன் கம்பெரிலிய என்ற மத்திய அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டங்களில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாகவும் திகழ்கிறது.

தமிழ் தேசிய இன மக்களின் நலன்சார்ந்து செயற்படுவதற்கான ஆணையைப் பெற்றுக்கொண்டு கடந்த காலத்தில் எம்மினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பதாகவும், இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகவும் கூறியே கூட்டமைப்பின் பெயரில் போட்டியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி எமது வாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் இராசதந்திர ரீதியில் முன்னெடுத்திருக்க வேண்டிய உரிமைப் போராட்டத்தை குழப்பியடித்து, தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கடந்த மகிந்த அரசாங்கம் மேற்கொண்டதாக சர்வதேசத்தினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை காத்திரமான முறையில் பற்றிப்பிடித்து குற்றவாளிகளை சர்வதேச சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கும், அதனூடாக எமது தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் கிடைத்த அரிய வாய்ப்பை தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான தவறான அணுகுமுறை நழுவவிட்டது.

தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மீறி, அரசாங்கத்தைக் காப்பாற்றி, அதற்கு முண்டுகொடுத்து வல்லரசு நாடுகள் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிராக இலங்கையில் கால்பதிப்பதற்கு எத்தகைய நிபந்தனைகளையும் வைக்காமல் ஆதரவளித்து, தமக்கு ஆதரவளித்த தமிழ் மக்களை நடுத்தெருவில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது தமிழரசுக் கட்சி.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக அனைத்துத் தமிழ்த் தலைமைகளையும் ஒரே அணியில் கொண்டுவரும் நோக்கில் வெளியில் இருந்த சக்திகளையும் உள்ளீர்த்திருந்த வேளையில் அதன் ஒற்றுமையைச் சிதைப்பதிலும் இலங்கை தமிழரசுக் கட்சி அரும்பங்காற்றியுள்ளது. தந்தை செல்வாவினால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட திரு.சம்பந்தன் தன்னையே செல்வாவாக நினைத்து திருவாளர் சுமந்திரனை அரசியலுக்கு அழைத்து வந்தார். அவர் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும், அரசாங்கத்திற்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடையில் தரகராகச் செயற்பட்டு வருகின்றார்.

இதன் காரணமாக கூட்டமைப்பின் ஒற்றுமை சிதைவடைந்ததுடன், தமிழரசுக் கட்சிக்குள்ளேயும் கருத்துவேறுபாடுகள் தோன்றத் தொடங்கியுள்ளது. இணைந்த வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டை மறந்து அல்லது தமது கொள்கையை தானே கைவிட்டு கிழக்கு பிரச்சினைகளில் போதிய கவனம் செலுத்தவும் அந்தக் கட்சி தவறியுள்ளது. இதனால் கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்கு எதிராக போர்க்கொடி தூக்கத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு அனைத்து ஒற்றுமைகளையும் கட்டமைப்புக்களையும் தீர்விற்கும் நீதிக்குமான வாய்ப்புக்களையும் சீர்குலைத்த திருவாளர் சுமந்திரன் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கூறி தமக்கு மேலதிக பாதுகாப்பை வழங்குமாறு காவல்துறை மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். தனக்கு மட்டும் போதாது என்று தனது அள்ளக்கைகளுக்கும் சிறப்பு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கோரியிருக்கிறார். தமது அள்ளக்கைகளான சாவகச் சேரியைச் சேர்ந்த சட்டத்தரணியான சயந்தனுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை மேயர் ஆர்னோல்டுக்கும் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று கோரியிருக்கிறார்.

சயந்தன் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து வெளியிட்ட கருத்து பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. தமிழ்த் தேசியம் பேசி புலிகளின் அரசியலை உயர்த்திப் பிடித்து மாகாணசபை உறுப்பினராகத் தெரிவாகியிருந்த இவர்தான் புலிகளின் மீது கடுமையான விமர்சனத்தையும் முன்வைத்தார். அத்துடன் தனது குருவான சுமந்திரனுடன் இணைந்து தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்றார்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் சாவகச் சேரியைச் சேர்ந்த கேசவன் சயந்தனுக்கும் அவரை அரசியலில் அறிமுகப்படுத்தி, கிராம மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் மாகாணசபை உறுப்பினருக்கான வேட்காளராக நியமித்து தனது பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சட்டத்தரணி மாகாணசபையில் இடம்பிடித்து தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக குரல்கொடுக்க வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டிருந்த அருந்தவபாலனுக்கும் இடையில் கைகலப்பு ஏற்படும் அளவிற்கு முரண்பாடு முற்றியிருந்தது.

அதேபோல் யாழ் மாநகர மேயர் ஆர்னோல்ட் அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணையத்தின் 40ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு மேலும் கால நீட்டிப்பு வழங்கக்கூடாது என்று சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையை நிராகரித்திருந்தார். மேலும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கும் தனது ஆதரவினைத் தெரிவித்திருந்தார். இவர்களின் தவறுகளை மறைப்பதற்காக கடந்த காலத்தைப் போல் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப்புலிகளால் தமக்கு உயிராபத்து இருப்பதாகத் தெரிவித்தால் எங்கே வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி தென்னிலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக் குழுக்களினால் தமக்கு உயிராபத்து



இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கும் பாதாள உலகக் குழுக்களுக்கும் அப்படி பகை உருவாவதற்கான காரணம் என்ன என்ற கேள்வியை வாசகர்களிடமே விட்டுவிடுவோம். ஆனால் தேர்தல் நேரத்தில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் இவர்கள் சீருடை அணிந்த காவல்துறை உத்தியோகத்தினருடன் களமிறங்கப் போவதும் அது தமிழ் மக்களை முகம் சுழிக்க வைக்கப்போவதும் சர்வ நிச்சயம்.

எனவே இனிவரும் தேர்தல்களில் தமிழ் மக்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தெரியாமல் தடுமாறும் தமிழரசுக் கட்சி எப்படியாவது மக்களின் அனுதாபத்தைப் பெற்றுவிட வேண்டும் என்று கருதுகிறது.

இம்முறை ஜெனீவா கூட்டத்தொடருடன் தமிழ் மக்கள் இலங்கை தமிழரசுக் கட்சியின்மீது வைத்திருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் அற்றுப்போய்விட்டது. சகல மட்டங்களிலும் அவர்கள் போட்ட இரட்டைவேடம் அம்பலப்பட்டுவிட்டது. எனவே வரப்போகும் தேர்தலை மையமாக வைத்து பாம்புக்கும் நோகாமல் தடிக்கும் நோகாமல் அரசாங்கத்தை எதிர்ப்பது போல எதிர்த்து அதனைவிட தீவிரமாக தனது ஆதரவினையும் முண்டுகொடுப்பையும் தமிழரசுக் கட்சி மேற்கொள்கிறது. வருகின்ற ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி நடைபெற உள்ள வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின்மீதான வாக்கெடுப்பில் இதனை நாம் கண்டுகொள்ள முடியும்.கடந்த மகிந்த அரசாங்கம் எப்படி தமிழ் மக்களை தமது அச்சத்தின் பிடியில் வைத்திருந்து வாக்களிக்க நிர்ப்பந்தித்ததோ அதே பாணியை இப்பொழுது திருவாளர்கள் சுமந்திரன் குழுவினர் பின்பற்ற முயற்சிக்கின்றனர். இது தமிழ் மக்களிடம் செல்லாது என்பதை இவர்கள் உணரும் நாள் வெகுதொலைவில் இல்லை.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மகிந்தவிற்கு சர்வதேசம் கற்பித்த பாடத்தை நாங்கள் அவர்களுடன் இணைந்து உங்களுக்கும் கற்பிப்போம் என்று மாவை கச்சிப்பதும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தமது பங்கிற்கு கூச்சலிடுவதும் மிகப் பெரிய நாடகம் என்பது தெரியவரும்.

கம்பரெலிய மற்றும் வடக்குகிழக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்காகவும் சனநாயகத்தைக் காப்பதற்காகவுமே இம்முறை வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்துள்ளதாக இவர்கள் காரணம் கற்பிப்பார்கள். தாம் வழங்கப்போகும் ஆதரவிற்கு பிரதிபலனாக குறைந்த பட்சம் அரசியல் கைதிகளின் விடுதலையையாவது இவர்கள் வலியுறுத்துவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# விண்வெளிப்போருக்கு பின்னுள்ள பூகோள அரசியலை உள்வாங்க தமிழினம் தயாராகுமா?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்



பூமியில் இருந்து 186 மைல்கள் (274 கி.மீ) தொலைவில் மணிக்கு 17000 மைல் வேகத்தில் பூமியின் கீழ்வட்டப்பாதையில் சுற்றிக்கொண்டிருந்த மைக்ரோசற்- ஆர் என்ற தனது செயற்கைக்கோளை இந்தியா கடந்த புதன்கிழமை சுட்டுவீழ்த்தியுள்ளது.

900 மில்லியன் வாக்காளர்களைக் கொண்ட இந்திய தேசத்தில் இன்னும் இரண்டு வாரங்களில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொண்டது தொடர்பில் பல வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

அமெரிக்க மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளே விண்வெளியில் உள்ள செயற்கைக் கோள்களை சுட்டு வீழ்த்தும் திறனை முன்னர் கொண்டிருந்தன, 1950 ஆம் ஆண்டு அமெரிக்கா ஆரம்பித்த இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, 1960 களில் ரஷ்யாவும் செயற்கைக்கோளை சுட்டு வீழ்த்தும் பரிசோதனையை மேற்கொண்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு சீனாவும் அதில் இணைந்து கொண்டது. சீனாவும் ஏவுகணை மூலம் தனது உபயோகமற்ற செய்மதி ஒன்றை பரீட்சார்த்த முயற்சியாக 2007 ஆம் ஆண்டு சுட்டு வீழ்த்தியிருந்தது. ஆனால் சீனாவின் ஏவுகணையானது பூமியில் இருந்து 800 கி.மீ தூரத்தில் இருந்த செயற்கைக்கோளைச் சுட்டு வீழத்தியிருந்தது.

அதன் பின்னர் 2012 ஆம் ஆண்டு செயற்கைக் கோளை சுட்டுவீழ்த்தும் தொழில்நுட்பத்தை தாம் கொண்டிருப்பதாகவும், ஆனால் அதற்கு 24 மாதங்கள் தேவையெனவும் இந்தியா தெரிவித்திருந்தது.

இந்தியாவின் கடந்த வார நடவடிக்கை தொடர்பில் தமக்கு முன்னரே தெரியும் எனவும், விண்வெளியில் ஏற்பட்ட வெடிப்பை கொலொராடாவில் உள்ள தமது வான்படைத் தளத்தில் இருந்து பதிவு செய்துள்ளதாகவும் அமெரிக்க வான்படையின் விண்வெளிப் பிரிவுக்கான தளபதி லெப். ஜெனரல் டேவிட் தோம்சன் அமெரிக்க செனட் சபையில் இடம்பெற்ற விவாதத்தில் தெரிவித்துள்ளார்.



எனினும் இந்த முயற்சியானது சீனாவுக்கு எதிரான போட்டியாகும் என யப்பானின் கொக்கைடோ பல்கலைக்கழகத்தின் விண்வெளி பாதுகாப்பு மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பேராசிரியர் கசூடோ சுசூக்கி தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் சீனா மேற்கொண்டுவரும் விஸ்தரிப்புக்களை முறியடிக்கும் நகர்வுகளை மேற்குலகமும், யப்பானும் மிகத்தீவிரமாக மேற்கொண்டுவரும் நிலையில் யப்பான் பேராசிரியரின் கருத்து முக்கியமானது.

1990 களில் சிறீலங்காவுக்கு நிதியை வழங்கும் நாடுகளில் முதன்மையில் இருந்த யப்பானை 2000 ஆம் ஆண்டுகளில் பிற்பகுதியில் சீனா பின்தள்ளியிருந்ததுடன், சிறீலங்காவின் பல பகுதிகளை தனது ஆதிக்கத்திற்குள்ளும் சீனா கொண்டுவந்திருந்து.

இந்த நிலையில்த்தான் தமிழ் மக்களின் விடுதலைப்போரை தனது பிராந்திய நலன்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட மேற்குலகக் கூட்டணி தற்போது ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் ஊடாக சிறீலங்கா மீது தொடர் அழுத்தங்களை தக்கவைப்பதற்கு முயற்சித்து வருகின்றது. அதாவது சிறீலங்கா மீது நடவடிக்கை அற்ற ஒரு அழுத்தமான சூழ்நிலை.

சிறீலங்கா அரசு கேட்காமலேயே பிரித்தானியா தலைமையிலான இணைத் தலைமைக்குழு நாடுகளின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கால அவகாசம் வழங்கியதன் பின்னணியும் இதுவே.

ஆனால் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அனைத்துலக சமூகத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் அது தகர்த்துள்ளது.

அது மட்டுமல்லாது கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை தாம் ஏற்கப்போவதில்லை என சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதும், நாம் கால அவகாசத்தை கோரவில்லை என சிறீலங்கா அரசதரப்பு கூறுவதும், ஐ.நா ஆணையாளரின் அறிக்கையில் பிழைகளைக் கண்டறிந்து தான் அதில் திருத்தங்களைக் கூறியதாக வடமாகாணத்திற்கான சிங்கள அரசின் ஆளுநர் பொய்யுரைப்பதும் ஐ.நாவின் நடவடிக்கைகளை கேலிக்கூத்தாக்கியுள்ளது.

அதாவது சிறீலங்கா அரசு அழுத்தமான கோரிக்கையை முன்வைக்காமலேயே ஐ.நா கால அவகாசம் வழங்கியது என்பது தமிழ் மக்களுக்கு கடுமையான அதிருப்தியை ஏற்ப டுத்தியுள்ளது.

ஆனால் இந்த கால அவகாசத்திற்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவுக்கு சென்று சிறீலங்கா அரசுக்கு பாதிப்புக்கள் வராதவாறு பார்த்துக்கொண்டதும், கூட்டமைப்பின் இந்த நடவடிக்கைக்கு சில புலம்பெயர் அமைப்புக்கள் ஆதரவுகளை வழங்கியதும் தமிழ் இனம் தனது வழ்நாளில் கண்ட துரோகத்திற்கான வரலாறாகும்.

எனினும் 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தாம் அனுமதிக்கப்போவதில்லை என தற்போது கூட்டமைப்பு தெரிவித்துவரும் கருத்துக்கள் நகைப்புக்கிடமானது என்பதுடன் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் அடுத்த நகர்வுமாகும்.

ஏனெனில் தொடர் காலநீடிப்புக்களுக்கு ஆதரவு வழங்கி தீர்மானத்தை நிறைவேற்றுவதில் தடைகளை ஏற்படுத்தும் கூட்டமைப்புத்தான் தற்போது அதில் திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்போவதிலலை என்று கூறுகின்றது.

ஆனால் தமிழ் மக்களிடம் உள்ள கேள்வி என்ன என்றால் நிறைவேற்றப்படாத தீர்மானத்தில் திருத்தம் கொண்டுவந்தால் என்ன அல்லது கொண்டுவராது விட்டால் தான் என்ன? என்பதுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையிலேயே தனது இன மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு தீர்வுகாண விரும்பினால் அரசியல் கைதிகளாக உள்ளவர்களின் விடுதலை, தமது வாழ்நிலங்களின் விடுதலை, காணாமல்போனவர்கள் தொடர்பான தகவல்கள் போன்ற கோரிக்கைகள் தொடர்பில் தொடர்போராட்டங்களை மேற்கொண்டுவரும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் மாதத்தின் முன்பகுதியில் இடம்பெறவுள்ள சிறீலங்கா அரசின் வரவுசெலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பை புறக்கணிக்குமா?

அதாவது பல சந்தர்ப்பங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் உள்ளபோதும் அதனை தனது உறுப்பினர்களின் சுய விருப்பு வெறுப்புக்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறம்தள்ளிவருவது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

ஆனால் தற்போது உலகின் கவனத்தை பெற்றுள்ள விண்வெளிப்போரின் அடுத்த நகர்வில் உள்ள பூகோள அரசியலை உள்வாங்குவதற்கு தமிழ் இனம் தனக்கான ஒரு வலுவான அரசியல் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

ஏனெனில் 1990 களின் பிற்பகுதியில் இந்தியாவும், பாகிஸ்தானும் மேற்கொண்ட அணுவெடிப்பு போட்டியை போல எதிர்வரும் காலத்தில் பாகிஸ்தானும் விண்வெளிப்போரில் தனது திறமையை காண்பிக்க முற்படும், அதேசமயம், திருமலைத்துறைமுகத்தை அமெரிக்காவிடம் பறிகொடுத்த சீனா தனது அடுத்த நகர்வை வடக்கை நோக்கி ஆரம்பிக்கும்.

# தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்த கல்வி நிலைமை இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளது

**தீபச்செல்வன்**

சிறிலங்காவில் தற்போது கல்விப் பொதுத்தரா தர சாதாரணதரப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இந்தப் பெறுபேறுகள், வடக்கு கிழக்கு மண்ணை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. கடுமையாக போர் நடைபெற்ற காலத்தில்கூட தமிழீழ மாணவர்கள் தமது சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். அப்படியிருக்க இன்று ஏன் இந்த நிலமை ஏற்பட்டிருக்கிறது? வடக்கு கிழக்கின் கல்வியை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த தமிழீழத்தின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் இந்த விடயம் குறித்து ஆராய்வது இன்றைய நாட்களில் மிகவும் அவசியமானது.

இலங்கைத் தீவில் மாத்திரமல்ல, தமிழகத்தில் மாத்திரமல்ல, உலகத்திலேயே ஈழத் தமிழர்கள் கல்வியில் தலைசிறந்தவர்களாக இருந்துள்ளார்கள். ஈழத்தின் தலைசிறந்த கல்விமான்கள் உலகம் எங்கும் கொண்டாடப்பட்டிருக்கிறார்கள். ஈழத்தில் படித்து, உலகின் எங்கோ ஒரு இடத்தில் முக்கிய பொறுப்பில், தலைமை வகித்த தமிழர்களும் உண்டு. தமிழ்த்துறையைப் பொறுத்தவரையில் ஈழத்து அறிஞர்கள் தமிழக தமிழ் அறிஞர்களை விஞ்சியவர்களாக இருந்திருக்கிறார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் மாணவர் சி.வை. தாமோதரம்பிள்ளை என்ற ஈழத்து அறிஞர். அவர்தான் தமிழ் இலக்கிய நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சுக்கு பதிப்பேற்றியவர். அதற்கு முன்னதாகவே, ஆறுமுகநாவலர் என்ற சைவத் தமிழ் அறிஞர் முதன் முதலில் தமிழ் பக்தி இலக்கியங்களை பதிப்பித்தார். தமிழகத்தின் பதிப்பு முயற்சிகளுக்கே ஈழத்தவர்கள்தான் முன்னோடிகள் என்பது வரலாறு. சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கைத் தீவில் தலைசிறந்த கல்விமான்.

பிரித்தானிய சிலோனில் ஒட்டுமொத்த ஈழத் தீவு சார்பில், ஒரு பிரதிநிதியாக சேர். பொன்ராமநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றைக்கு சிங்களத் தலைவர்கள் பிரித்தானியச் சிறையில் இருந்தபோது, அவர்களை மீட்டெடுக்கும் வகையில் அணுகவும் உரையாடவும் இருந்த சிறந்த கல்விமான் இராமநாதன்தான். (எனினும் சேர் பொன் இராநாதன் போன்றவர்கள், தமது இனம் சார்ந்து சிந்தித்திருந்தால், ஈழத் தமிழர்கள், சுதந்திர சிலோனில் மாபெரும் இன அழிப்புக்கும் ஒடுக்குமுறைக்கும் முகம் கொடுத்திருக்கமாட்டார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.)

ஈழத் தமிழ் மக்களின் கல்வியறிவும் அறிவுப் புலமையும் அவர்களை காலம் காலமாக தனித் தேசமாக வாழ்ந்தவர்கள் என்பதை எடுத்துரைக்கின்றது. இது சிங்களவர்கள் மத்தியில், சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் பெரும் எரிச்சலை உருவாக்கியுள்ளது. இதனால் ஈழத் தமிழ் மக்களை கல்வியில் வீழ்ச்சிக்குள் தள்ள வேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகள் சுதந்திர சிலோனில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் பிரித்தானியர்களால் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட போது முன்னணி வகித்த ஈழத் தமிழ் மக்கள் சிங்கள சிறிலங்காவில் பின்தள்ளப்பட்டு வந்தமை வரலாறு.

ஈழத் தமிழ் மக்களை ஒடுக்க பயங்கரவாத தடைச்சட்டம், ஈழத் தமிழ் மொழியை ஒடுக்க தனிச் சிங்களச் சட்டம் என உருவாக்கப்பட்ட போதுபோல, ஈழத் தமிழ் கல்வி வளர்ச்சியை ஒடுக்க பேரினவாதிகளால் கல்வித் தரப்படுத்தல் என்ற ஒடுக்குமுறை கொண்டுவரப்பட்டது. மேற்குறித்த விடயங்கள் யாவும் ஈழப் போராட்டத்திற்கு வழிகோலிய அடிப்படைக் காரணங்கள் ஆகும். வடக்கு கிழக்கிற்கான கல்வி வளங்களை தடுத்தமை முதல், ஈழத் தமிழ் மாணவர்களை படுகொலை செய்தல், பாடசாலைகளை குண்டுகளை போட்டு அழித்தல் என்று பல்வேறு வகையிலும் தமிழீழக் கல்வித்துறை அழிப்புக்கு முகம் கொடுத்தது.



1980களின் இறுதியில் சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டில் சென்ற யாழ் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி விடுவிக்கப்பட்டபோது, அப் பாடசாலை அழிக்கப்பட்டு இராணுவ முகாமும் இராணுவ சொகுசு விடுதியுமாய் மாற்றப்பட்டிருந்தது. உலகில் பள்ளிக்கூடங்களை அழிக்கிற அரசு எப்படியான அரசாக இருக்கும்? பள்ளிக்கூடங்கள்மீது குண்டுகளை பொழிகிற அரசு எப்படியான அரசு? பள்ளிச் சீருடைகளுடன் கொல்லப்பட்ட மாணவர்கள் அடுக்கப்பட்டிருக்கிற நாடு எப்படியான நாடு? ஈழத்தில் செஞ்சோலையிலும் நாகர்கோவில் பாடசாலையிலும் என எத்தனை பாடசாலைகளில் இந்தக் காட்சியை பார்த்திருக்கிறோம்?

ஆப்கானிஸ்தானில் நடப்பது தெரிகிற உலகத்திற்கு ஈழ மண்ணில் சிங்கள அரசு செய்கிற அட்டூழியங்கள் தெரிவதில்லை. இந்த அழிப்புக்கும் புறக்கணிப்புக்கும், ஒடுக்குமுறைக்கும் மத்தியில்தான் ஈழ மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். எத்தனையோ சாதனைகளை செய்திருக்கிறார்கள். மின்சாரம் இல்லை. பள்ளி செல்ல சரியான சீருடை இல்லை. பள்ளிக்கூடத்திற்கு செல்லும் வழியில் சிங்களப் படைகளால் அச்சுறுத்தல். பள்ளிக்கூடத்தில் இருந்து படித்தால் எப்போது விமானங்கள் குண்டுகளை கொட்டும் என்ற அபாயம். இதற்கு மத்தியில் எத்தனை சாதனைகளை தமிழீழம் செய்திருக்கிறது.

ஈழப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2009 வரையிலும், ஏன் அதற்குப் பின் ஒரு சில பரீட்சைகளிலும் ஈழத்து மாணவர்கள் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் மன்னாரிலும், வவுனியாவிலும், திருமலையிலும், மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் செய்த சாதனைகள் சிறிலங்காவின் அத்தனை மாவட்டங்களையும் திரும்பிப் பார்க்கச் செய்தனர். இத்தனை போரிலும், இத்தனை தடையிலும் இப்படி சாதனை செய்கிறார்களே என்று எதிரிகள் கூட நடுங்கினர்.

எத்தனை தடையிலும் ஈழப் போராட்டம் நிமிர்ந்திருந்ததுவோ, அப்படியே ஈழக் கல்வியும் உயர்ந்திருந்தது. அதற்கு முதன்மையான காரணம் விடுதலைப் புலிகள் கல்விக்கு அந்தளவு முக்கியத்துவத்தை அளித்திருந்தனர். தமிழீழக் கல்வித்துறை பாரிய பங்களிப்பை ஆற்றியது. தமிழீழ மாணவர் அமைப்பு பாரிய பங்களிப்பை வழங்கியது. இடைவிலகிய மாணவர்களை மீள பாடசாலையில் இணைத்தல், மாணவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல் மாணவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுதல் என்று யாவற்றையும் செய்ய எமக்கென ஒரு அரசு இருந்தது.

நிலத்தாலும் படையாலும் மாத்திரம் அன்று நாம் போராடவில்லை. கல்வியாலும் போராடினோம். தமிழீழ மாணவர்களின் கல்வி இலக்கு என்ன? அவர்கள் எதை அடைய வேண்டும் என்று தெளிவான வழியை அன்றைய தமிழீழ அரசு காட்டியது. ஆனால் இன்று நிலமை எவ்வாறு இருக்கிறது தெரியுமா? பள்ளிக்கூடம் செல்லும் மாணவிகளை திருமணம் முடிக்க வேண்டும் என்று தெருவில் நிற்கின்றனர் சிங்களப் படைகள். ஆண் மாணவர்களிடம் போதைப் பொருட்களை கொடுக்க வேண்டும் என்று தெருவில் நிற்கின்றனர் சிங்களப் படைகள். இந்த நிலையில்தான் வீட்டில் இருந்து பாடசாலைக்கு செல்லுகின்றனர் மாணவர்கள்.

இன்றைக்கு தமிழ் இனம் எவ்வாறு கண்ணுக்குத் தெரியாத இன அழிப்பிற்கு முகம் கொடுத்துள்ளதோ அவ்வாறே ஈழத் தமிழ் மாணவர்களும் கல்வி அழிப்புக்கும்



ஒடுக்குமுறைக்கும் ஆளாகியுள்ளனர். சிங்கள இராணுவத்தினர் கல்வியிலும், பாடசாலைகளுக்குள்ளும் மூக்கை நுழைக்கின்றனர். இன்னமும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளிகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# ஜெனீவா 2019 - நிலாந்தன்

‘மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த அதிகாரமும் அந்தச் சபைக்கு இல்லை. இஸ்ரேலுக்கும் எதிராக 70 வரையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றுகூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கும் ஒரேயொரு நாடு இலங்கையாகும்.’ இவ்வாறு கூறியிருப்பவர் கலாநிதி பாலித்த கோகன்ன. வியத்மக அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கடந்த சனிக்கு முதற்சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அதில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். கலாநிதி பாலித்த கோகன்ன ஒரு புத்திஜீவி. முன்னாள் ராஜதந்திரி. புலிகள் இயக்கத்துடனான ஒஸ்லோப் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பின் தலைவராகச் சென்றவர். ஐ.நாவுக்கான இலங்கைத்தீவின் வதிவிடப் பிரதிநிதியாக இருந்தவர். அப்படிப்பட்ட ஒருவர் ஓய்வு பெற்றபின் இவ்வாறு கூறுகிறார். இக்கூற்றை ஓய்வு பெற்ற ஒரு இராசதந்திரியின் தனிப்பட்ட கூற்றாக எடுத்துக்கொள்வதா? அல்லது சிங்கள ராஜீயக் கட்டமைப்பின் ராஜீய நாகரிக முகமூடிகளை அணிந்திராத இயல்பான தோற்றம் இதுதானா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை அசங்க அபயசேகர கொழும்பு ரெலிகிராபில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அக்கட்டுரையில் அவர் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சின் மூத்த அலுவலர் ஒருவரின் கூற்றை மேற்கோள்காட்டி இருக்கிறார். ‘நாங்கள் யாரோடும் எந்த விலைக்கும் படுக்கையைப் பகிரக்கூடிய ஒரு பாலியல் தொழிலாளி ஆகி விட்டோம்.’ என்று. அசங்க அபயசேகர பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் தேசியப் பாதுகாப்பு சிந்தனைக் குழாத்தின் பணிப்பாளர் நாயகம் ஆவார். அவர் குறிப்பிடும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி கூறியது பாலித கோகனவின் கூற்றை பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது.

ஜெனீவாவில் மட்டுமல்ல புவி முழுவதிலும் சிறிலங்காவின் ராஜீயக் கட்டமைப்பு அவ்வாறுதான் செயற்பட்டு வருகிறது. 2009ல் ஆயுத மோதல்களை முடிவிற்குக் கொண்டுவந்த போதும் அது அவ்வாறுதான் செயற்பட்டது. அதற்குப் பின்னரும் அதன் விளைவாக ஏற்பட்ட ஒரு புதிய வளர்ச்சியாகிய ஜெனீவாவை எதிர்கொள்ளல் என்ற அம்சத்திலும் அவர்கள் அப்படித்தான் செயற்பட்டு வருகிறார்கள். அதன் விளைவாகவே கடந்த கிழமை வெளிவந்த ஜெனீவாத் தீர்மானம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் ஒன்றாக அமையவில்லை. அது மட்டுமல்ல அரசாங்கம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒப்புக்கொண்ட பொறுப்புக்களில் இருந்தும் பின்வாங்குகிறது பாலித கோகன கூறியது போல.

எனது கட்டுரைகளில் நான் திரும்பத் திரும்பக் கூறுவதுண்டு. ஐ.நா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகளுக்கும், ஐ.நாத் தீர்மானங்களுக்குமிடையே தமிழ் மக்களுக்குப் பாதகமான இடைவெளிகள் உண்டு. இம்முறையும் ஆணையாளர் கலப்பு விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தினார், கால அவாகாசத்தில் கால அட்டவணையும் கேட்டிருந்தார். அதுமட்டுமல்ல ரோம் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. ஆனால் ஜெனீவாவில் உரையாற்றிய திலக் மாரப்பன மேற்படி கோரிக்கைகளை நிராகரித்துவிட்டார்.



எனினும் 30:1 தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் என்று கேட்டு மேலும் ஈராண்டுகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி கூறின் கடைசியாக வந்த ஜெனிவாத் தீர்மானம் எனப்படுவது 30:1 தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கும் ஒரு தீர்மானம்தான்.

கலப்பு நீதிமன்றத்துக்கான பரிந்துரை எனப்படுவது புதிய தீர்மானத்திலில்லை. ஆனால் 30:1 தீர்மானத்தில் அதற்குரிய அடிப்படை உண்டு. அத்தீர்மானத்திலுள்ள ஆறாம் இலக்கப் பந்தியில் கொமன் வெல்த் நாடுகளின் நீதிபதிகள் உட்பட வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கேற்பைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. பாலித கோகனவும் தனது மேற்சொன்ன பேச்சில் அதைச் சுட்டிக்காட்டுகிறார். அவ்வாறு வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிப்பதற்கு யாப்பில் இடமுண்டா என்பதை ஆராய்வதற்காக 2015 இல் அமெரிக்காவிலிருந்து இரண்டு சட்டத்துறை வல்லுனர்கள் இலங்கைக்கு வந்ததாகவும் இவர்கள் கண்டு பிடித்த விடயத்தைத்தான் இப்பொழுது சுமந்திரன் ஒரு விவகாரமாக ஆக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே இங்கு ஒன்று தெளிவாகத் தெரிகிறது. 2015ம் ஆண்டு 30:1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலம் கலப்பு விசாரணை பொறிமுறைக்கான அடிப்படைகளை ஏற்றுக் கொண்ட அரசாங்கம் நான்கு ஆண்டுகளின் பின் அதை மறுக்கிறது. அதாவது 30:1 தீர்மானத்திலிருந்து அரசாங்கம் பின் வாங்குகிறது.

கடைசித் தீர்மானத்தில் ஒக்ரோபர் ஆட்சிக் குழப்பத்திலிருந்து நாட்டை விடுவித்தமைக்காக நாட்டின் நீதி பரிபாலனக் கட்டமைப்புக்கு பாராட்டு வழங்கப்படுகிறது. இப்போராட்டத்தால் கிடைத்த துணிச்சலும் அரசாங்கம் தனது வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்க ஒரு காரணமாகும். எதுவாயினும் ராஜிய மொழியில் கூறினால் அரசாங்கம் தமது கூட்டுப் பொறுப்பிலிருந்து பின் வாங்குகிறது என்று பொருள். பாலித கோகன கூறியது போல.

சிவாஜிலிங்கம் கூறுகிறார் கொலை வழக்கில் கொலைகாரன் பிணையில் நிற்கிறான். வழக்குத் தள்ளுபடி செய்யப்படவில்லையென்று. ஆனால் வழக்கே தொடங்கவில்லை என்பதுதான் தமிழ் மக்களின் முறைப்பாடாகும். இது விடயத்தில் நாடாளுமன்றத்தில் சுமந்திரன் ஆற்றிய உரைக்கு எதிர்வினையாற்றிய டிலான் பெரேரா அப்படிக் கதைத்தால் மீண்டும் ஒரு 83 யூலை உருவாகும் என்று எச்சரிக்கிறார். அதாவது கொழும்பில் தமிழ் மக்களுக்கு அடி விழும் என்று வெருட்டுகிறார். ஆனால் வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கியதை ரணில் ஒரு வெற்றியாகக் காட்டுகிறார். இது ஒரு தேர்தல் ஆண்டு. ரணிலைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஐ.நாவுக்கு உண்டு. ஜெனீவாவில் மட்டுமல்ல. உள்நாட்டிலும் அவர்கள் ரணிலைப் பாதுகாப்பார்கள். மேற்கு நாடுகள் தமக்கு விசுவாசமான ஒரு தலைவரை பாதுகாக்கின்றன. ஆனால் அது அதன் தர்க்கபூர்வ விளைவாக சிங்கள - பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பாதுகாக்கின்றது. ஓர் அரசுடைய தரப்பாக இருப்பதனால் எத்தனை வாக்குறுதிகளை மீறினாலும் ஐ.நா அரசாங்கத்தை இப்போதைக்கு தண்டிக்கப் போவதில்லை. ஓர் அரசுடைய தரப்பாக இருப்பதன் அனுகூலம் இது. ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களைப் பொறுத்தவரை?

அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் குறைந்தபட்சம் ஒருமித்த தரப்பாகக் கூட ஜெனீவாவில் காணப்படவில்லை என்பதுதான் இங்குள்ள பயங்கரமாகும். தமிழ் மக்களை யார் ஒருகுடைக்கீழ் திரட்டுவது? அதைத் தாயகத்திலிருந்துதான் செய்ய வேண்டும். ஜெனீவாவை எதிர்கொள்வது என்பதும் உலகத்தை எதிர்கொள்வது என்பதும் பிராந்தியத்தை எதிர்கொள்வது என்பதும் தாயகத்திலிருந்தே திட்டமிடப்பட வேண்டும். ஆனால் இங்கு நிலமை தலைகீழாக இருக்கிறது. ஜெனீவாவை எதிர்கொள்வதும் உலகத்தை எதிர்கொள்வதும் அதிகபட்சம் டயஸ்பொறா பரப்புக்குள் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களாகவே காணப்படுகின்றன. இதில் பிராந்தியத்தில் அதாவது இந்தியாவைக் கையாள்வது என்பதற்கு எந்திவிதமான ஒரு கட்டமைப்புமில்லை. பொறிமுறையுமில்லை.

2009ற்கு முன்பு ஆயுதப் போராட்டத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்கள்தான் 2009ற்குப் பின்பு ஜெனீவாவைப் பெருமளவிற்குக் கையாண்டன. 2009ஐ உடனடுத்து வந்த ஆண்டுகளில் தாயகத்தில் யுத்த வெற்றிவாதம் கோலோச்சியது. அதனால் நீதி கோரிய போராட்டங்கள் சிறு திரள் வடிவிலேயே நிகழ்ந்தன. அச்சுறுத்தலான அச்சூழலுக்குள் ஒரு புறம் போராடும் வெளி சிறியதாக இருந்தது. அவமானகரமான ஒரு தோல்விக்குப் பின்னரான கூட்டு உளவியலும் ஒரு தடையாக இருந்தது. இவற்றைவிட முக்கியமாக போராட்டத் திராணியற்ற கூட்டமைப்பும் ஒரு தடையாக இருந்தது. இன்றளவும் அது தடையாகத்தான் இருக்கிறது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

9ஆம் பக்க தொடர்ச்சி →

## ஜெனீவா 2019 - நிலாந்தன்

இப்படிப்பட்டதொரு சூழலில் 2015ல் யுத்த வெற்றிவாதம் கவிழ்க்கப்பட்டது. அதைக் கவிழ்த்ததற்கு கூட்டமைப்பு உரிமை கோருகிறது. தான் ஏற்படுத்திக்கொடுத்த சனநாயக வெளிக்குள்தான் மக்கள் போராடி வருகிறார்களென்று சம்பந்தர் அடிக்கடி கூறுவதுண்டு. ஆனால் அந்த சனநாயக வெளியை ஒரு போராட்ட வெளியாகவோ, பரிசோதனை வெளியாகவோ பயன்படுத்தத் திராணியற்ற ஒரு கட்சி அதற்கு உரிமை கோர முடியாது. ஏனென்றால் அது ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சனநாயக வெளியின் பெறுமதியும் ஆழமும் அக்கட்சிக்கே தெரியாது. அதை அவர்கள் பயன்படுத்தத் தவறியதால்தான் பாதிக்கப்பட்ட மக்கள் போராடத் தொடங்கினார்கள். இத்தகையதோர் பின்னணியில் 2015ற்குப் பின் தமிழரசியலை தாயகத்தை மையமாகக் கொண்டு திட்டமிடுவதற்கு உரிய ஓர் அரசியல் சூழல் தோன்றியது. ஆனால் கூட்டமைப்பைப் பிழை என்று கூறும் சக்திகள் அதைப் போதியளவிற்குக் கையாளத் தவறிவிட்டன.

இந்த வெற்றிடத்துள் யுத்த வெற்றி வாதமானது மறுபடியும் தாமரை மொட்டு சின்னத்தோடு மேலெழுந்து விட்டது. மகிந்தவின் மீளெழுச்சி ஜெனீவாவில் ரணிலின் பேரத்தை அதிகரித்து விட்டது. அதன் தர்க்கபூர்வ வளர்ச்சியானது தமிழ் பேரத்தை உயரவிடவில்லை.

கடந்த பத்தாண்டுகளில் இம்முறை ஜெனீவாவில் ஒப்பீட்டளவில் அதிக தொகைச் செயற்பாட்டாளர்களைக் காணமுடிந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் ஒருமித்த அணியாக அங்கே காணப்படவில்லை. இம்முறையும் தாயகம் ஒரு சக்திமிக்க மையமாக எழுச்சி பெற்றிருக்கவில்லை. கடந்த ஒன்பதாண்டுகால தலைகீழ்ப் பொறிமுறையின் தொடர்ச்சியை இம்முறையும் காண முடிந்தது.

வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட, வேறுபட்ட நிலையான நலன்களைக் கொண்ட, வேறுபட்ட வேலைத்திட்டங்களைக் கொண்ட, வேறுபட்ட நிதி வழங்குநர்களைக் கொண்ட பல்வேறுபட்ட தரப்புக்களாக தமிழ் மக்கள் சிதறிக் காணப்படுகிறார்கள். ஜனவசியம் மிக்க, உலகைத் திரும்பிப் பார்க்க வைக்கின்ற ஒரு தலைமையின் கீழ் அவர்கள் திரட்டப்படவில்லையென்றால் இரண்டாண்டு கால அவகாசம் முடிந்த பின்னரும் ஜெனீவாத் தீர்மானங்கள் முப்பதின்கீழ் ஒன்று தீர்மானம் போட்ட மலட்டுக் குட்டிகளாகவே வெளிவரும். இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி கூறியிருப்பது போல ஓர் அரசுடைய தரப்பாகிய சிங்கள மக்கள் ஆகக் கூடிய பட்சம் நெகிழ்ந்தும் நசிந்தும் சுழித்தும் குத்துக்கரணமடித்தும் தம்மைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களோ அப்படிப்பட்ட ராஜீயக் கட்டமைப்புக்கள் எவையுமின்றி தீர்க்கதரிசனம் மிக்க வெளியுறவுக் கொள்கை எதுவுமின்றி ஐக்கியமின்றி ஜனவசியமிக்க ஒரு தலைமையின்றி ஜெனீவாவை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களா?

## மன்னார் புதைகுழி ஆய்வில் பாரதூரமான தவறு

மன்னார் மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களின் ஆய்வு முடிவுகளில் முரண்பாடுகள் காணப்படுவதானது, அதில் ஏதோ தவறுகள் உள்ளதைக் காட்டுகிறது என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழி தொடர்பான கார்பன் பரிசோதனை அறிக்கையை ஏற்பதா, இல்லையா என்பது தொடர்பாக நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும். அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மனித எச்சங்கள் 500 வருடத்திற்கு முற்பட்டவை என கார்பன் பரிசோதனை அறிக்கைகளின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் தற்போது இங்கு பெறப்பட்டுள்ள மனித எச்சங்கள் 50 வருடங்களுக்கு உட்பட்டவை



என பரசீலித்துக் கூறுகின்றனர். எவ்வாறு இது சாத்தியப்படும்? இதில் எங்கேயோ முக்கியமான பாரதூரமான தவறு நடந்திருக்கிறது. எனவே மனித எச்சங்கள் மீண்டும் பரிசோதனை செய்யப்பட வேண்டும். விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். " என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

2ஆம் பக்க தொடர்ச்சி →

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு தவறு செய்திருக்கிறோம் என்பதை தெற்கில் உணர்ந்து கொண்டு ஒரு தீர்வுக்கு வர வேண்டும்.

நடுநிலையாளராக வந்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு தவறு செய்திருக்கிறோம் என்பதை தெற்கில் உணர்ந்து கொண்டு ஒரு தீர்வுக்கு வர வேண்டும். எங்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளும், நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய இறுதி தீர்வை வழங்கக் கூடிய எவரையும் நாங்கள் ஆதரிப்போம். ஆனால், வெறும் சொற்களால் அளிக்கப்படும் வாக்குறுதிகளை ஏற்க முடியாது. ஒரு புரிந்துணர்வுக்கு வர மூன்றாவது தரப்பு எமக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். நான் எந்த சமூகத்திற்கும் எதிரானவன் இல்லை. நான் ஒரு நீதிபதியாக இருந்தேன், அரசியலில் ஈடுபடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் ஒரு முகாமை ஆதரிப்பதில் எனக்கு சிரமம் இல்லை. ஆயினும், எனது கட்சி உறுப்பினர்கள் அதற்கு மறுப்பு தெரிவிக்கலாம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2ஆம் பக்க தொடர்ச்சி →

## கால அவகாசத்திற்கு அர்த்தம் கற்பித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமைதிகாப்பது ஏன்? தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கேள்வி

ஆகியோர் ஜெனீவா தீர்மானத்தில் உள்ள விடயங்கள் அனைத்தையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேசத்தின் தலையீட்டிற்கே இடமளிக்கப்போவதில்லை என மிகக் கடுமையாக கருத்துக்களை முன்வைக்கவும், இவர்களை விட ஒருபடி மேலே சென்று வடமாகாண ஆளுநர் சுரென் ராகவன் அரசின் மீதான தனது அதியுச்ச விசுவாசத்தினை காண்பித்துள்ளார்.

ஜெனீவா கூட்டத்தொடர் நிறைவடைந்ததும் இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய பிரதிபலிப்புக்களைப் பார்த்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரே கொதித்தெழுந்து பதிலளிப்பு அறிக்கையை பகிரங்கமாக வெளியிட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிவரும் கூட்டமைப்பு அம்மக்களின் விருப்பத்திற்கு மாறாக தீர்மானங்களை எடுத்துவிட்டு இப்போது வாய்மூடி அமைதிகாப்பதற்கான காரணம் என்ன?

கூட்டமைப்பு தனது அமைதிக்கான காரணமாக, புதிய அரசியலமைப்பு வரும், இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் அதற்காக அமைதியாக இருக்கின்றோம் என்றா கூறப்போகின்றது. 'கரணம் தப்பினால் மரணம்' என்று கூறுவதுண்டு. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னணியில் இராசதந்திரமாக அணுகுகின்றோம். சர்வதேசம் எம்முடன் இருக்கின்றது என்று கூறி பாதிக்கப்பட்ட மக்களின் ஆணையை பெற்று பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்துள்ள கூட்டமைப்பினரே உங்களின் இராசதந்திர தோல்வியால் தற்போது ஒட்டுமொத்த இனமல்லவா மடியும் ஆபத்துக்குள் சிக்கியுள்ளது. கூட்டமைப்பினரான உங்களின் 'கரணங்கள்' தனிப்பட்ட ரீதியில் உங்களை தப்ப வைத்திருக்கலாம். ஆனால் ரணத்தினை சுமக்கும் அவலத்தை அனுபவித்த இனத்தின் பிரதிநிதிகள் என்பதைக் கூட மறந்து வாய்மூடி மௌனம் காக்குமளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளமை அடிப்படை மனித மாண்பை மீறிய செயற்பாடல்லவா? என்றுள்ளது.

8ஆம் பக்க தொடர்ச்சி →

## தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்த கல்வி நிலைமை இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளது

சிங்கள இராணுவத்தின் ஆட்சியில் உள்ளன. முன்பள்ளி ஆசிரியர்கள், இராணுவ சீருடை அணிந்து ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அப்பாவி முன்பள்ளி மாணவர்களின் நெஞ்சில் சிங்கள இராணுவத்தின் சின்னங்கள் சூட்டப்பட்டுள்ளன.

இம்முறை வெளியான சாதாரண தரப் பெறுபேற்றில், முதல் இரண்டு இடங்களிலும் மாத்தறையும் ஹம்பாந்தோட்டையும் இருக்கிறது. இறுதி இரண்டு இடங்களிலும் கிளிநொச்சியும் திருகோணமலையும் இருக்கிறது. இலங்கையில் முன்னணியில் இருந்த யாழ்ப்பாணம் 18ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு, மட்டக்களப்பு யாவும் பின் நிலையில் உள்ளன. இலங்கையில் முதல் பத்து இடங்களில் ஒருவர்கூட தமிழ் மாணவர் இல்லை. கடந்த சில மாதங்களின் முன் வெளியான உயர்தரப் பெறுபேற்றிலும் இதுதான் நிலமை.

எல்லாப் பழியையும் சிங்கள சமூகத்தின்மீதும், சிங்களப் பேரினவாத அரசின் மீதும் போட்டுவிட்டு செல்வதல்ல இப் பத்தியின் நோக்கம். இதைவிட மாபெரும் போர்க்களத்திலும், போர்காலத்திலும் விடுதலைப் புலிகளாலும் அவர்களின் அரசாலும் கல்வியால் சாதனை செய்யப்பட்டது என்றால், இன்றைய சூழலில் நாம் பின்னுக்கு தள்ளப்படுவது நம்மை ஆளும் அரசினால் மாத்திரமல்ல, நம்மை நாமே ஆளும் கட்டமைப்புக்களாலும்தான் இந்தப் பின்னடைவு. நம்முடைய தலைமைகளும் நம்முடைய நிர்வாகங்களுமே இதனை பொறுப்பேற்க வேண்டும். ஈழ மண்ணின் கல்வியையும் எதிர்காலத்தையும் மீட்டெடுக்க உண்மையான உழைப்பே இன்று தேவை.

# ரணிலின் எதிரொலி தான் சுமந்திரன்

தோழர் தியாகு

**நடைபெற்று முடிந்த ஐ.நாவின் 40 வது கூட்டத்தொடரிலே சிறீலங்காவிற்கு மேலும் 02 வருட கால அவகாசம் வழங்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்கள் மிக பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளானதோடு ஐ.நா.வின் இந்த நிலைப்பாடு தொடர்பில் தாயகம் தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் உள்ள உணர்வாளர்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**

**இந்நிலையில் தமிழ தேசிய உணர்வாளரும் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக போராட்ட களத்திலும் கருத்தியல் தளத்திலும் காத்திரமான பங்களிப்பை ஆற்றிவரும் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் ஆலோசகர் தோழர் தியாகு அவர்கள இலக்கு மின்னிதழுக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கிய நேர்காணல்**



**மீண்டும் இலங்கைக்கு கால நீட்டிப்பு கொடுத்து ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதனால் தமிழர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் எதாவது முன்னேற்றம் நிகழுமா?**

இந்தத் தீர்மானத்தால் தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஈராண்டுக்கு முன்பு நின்ற இடத்திலேயே நிற்கிறோம். தொடர்ந்து ஐ.நாவுக்கு உள்ளேயும் வெளியேயும் நம் போராட்டத்தை முன்னெடுப்போம். மீண்டுமொரு முறை ஐ.நா மனிதவுரிமைப் பேரவைத் தீர்மானத்தில் சிறிலங்கா கூட்டு முன்மொழிவு வழங்கியுள்ளது. சிங்களத்தால் முன்போல் ஒன்றுபட்டு நிலையெடுக்க முடியவில்லை என்பது தமிழர் போராட்டத்தின் விளைவு. பன்னாட்டு அழுத்தத்தின் விளைவும் கூட. எல்லா முயற்சிகளுக்கும் அடிப்படை தாயக மக்களின் நீதிப்போராட்டமே. ஐ.நாவில் இந்தச் சிக்கல் தொடர்ந்து நீடிப்பது நல்லது. தாயக மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகத் தமிழகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் போராட்டங்கள் வளர்ந்து சென்றால் ஐ.நாவிலும் மாற்றம் வரக் கூடும்.


**பத்தாண்டுகளான பின்பும் தமிழர்களுக்கான நீதியை வென்றெடுப் பதில் முன்னேற்றம் இன்றி இருப்பதற்கான காரணம் என்ன? ஈழத் தமிழர்கள் இந்நிலையில் இருந்து பெற வேண்டிய படிப்பினை என்ன?**

பத்தாண்டு கழிந்த பின்னும் தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் வெற்றி கிடைக்கவில்லை. நடந்தது இனவழிப்பு என்ற அறிந்தேற்பு கூட இல்லை. அதே நேரத்தில் உலக ஒழுங்கிலான ஏற்றத்தாழ்வையும் மீறி மனிதவுரிமைப் பேரவையில் நம் கோரிக்கை உயிர்ப்புடன் தொடர்வதே ஒரு சாதனைதான். முள்ளிவாய்க்காலில் மூழ்கி விட்ட போராட்டம் ஒரு வகையில் புத்துயிர் பெற்று, மக்கள் மீண்டும் துணிவு பெற்றுப் போராடிக் கொண்டிருப்பதே ஒரு முன்னேற்றம்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தமிழ் மக்களின் போராட்டத்தீயை அணைக்கும் தீயணைப்புப்படையாகச் செயல்பட்டு வருவதையும் மீறித் தமிழ் மக்கள் அயராது போராடுவது மகிழ்ச்சிக்குரியது. புலம்பெயர் அமைப்புகளின் விட்டுக் கொடாத போராட்டம் தாயகத்தமிழர்களின் போராட்டத்துக்கு ஊக்கமளிக்கக் கூடியது. நீதிக்கான போராட்டத்தை ஐ.நாவை மட்டும் நம்பி நடத்த முடியாது. அதே போது ஐ.நாவைப் புறக்கணித்து விட்டும் நடத்த முடியாது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இது ஒரு நீடித்த போராட்டம்தான். அதை நடத்துவதற்கான பொறுமையும் உறுதியும் வேண்டும். வரலாறு நம்பக்கம் என்ற நம்பிக்கையும் வேண்டும்.

**இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டமை சரியான முடிவே என்று தொடர்ந்து பிரச்சாரம் செய்துவரும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் கொழும்பிலே வைத்து இலங்கை இராணுவம் மட்டுமல்ல விடுதலைப்புலிகளும் போர்விதிமுறைகளை மீறியுள்ளனர் என்று கருத்து கூறியுள்ளார் இவரின் உரை தொடர்பில் தங்களின் கருத்து?**

அவர் சொல்வது ரணிலின் எதிரொலி. *His Masters's Voice* வாதத்துக்கும் அவர் சொல்வது போலவே இருக்கட்டும். சிறிலங்கா தமிழர்களை இனவழிப்பு செய்தது. புலிகள் சிங்களவர்களை இனவழிப்பு செய்தார்களா? உள்ளக பொறிமுறைக்குள் தமிழர்களுக்கான நீதியை நீர்த்து போக செய்யும் அவலத்திற்க்கு எதிராக பன்னாட்டு விசாரணையை வலியுறுத்துவாரா? இலங்கையின் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பச் சொல்வாரா? எல்லாவற்றையும் ஊற்றி மூடும் சிங்களத் திட்டத்தில் இவர் ஒரு பங்காளி.

## இலங்கை அரசிற்கு ஆதரவாக அமையவுள்ள துறைமுகத்தை தடுப்பேன் - பொன் இராதாகிருஷ்ணன்



இலங்கை அரசிற்கு ஆதரவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அமையவுள்ள துறைமுகத்தை தடுப்பேன் என மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை அருகேயுள்ள பகுதியில் நேற்று (சனிக்கிழமை) தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், ஒன்றரை இலட்சம் தமிழர்களை கொன்று குவித்த மகிந்த ராஜபக்சவின் வேட்பாளராக போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் வசந்தகுமார் இலங்கை அரசின் கைக்கூலியாக செயற்படுகின்றார் என குற்றஞ்சாட்டினார். அத்தோடு, எதிர்கால தேர்தல்களில் கை சின்னம் வழங்கக்கூடாது எனவும் அது குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஈழத்தமிழர் விவகாரம், வைகோ மீது தமிழக முதலமைச்சர் பாய்ச்சல்



ஈழத் தமிழர்கள் படுகொலைப்பற்றி வாய் கிழிய பேசிய வைகோ இப்போது கைகட்டி வாய்பொத்தி தி.மு.க தலைவரிடம் சரணாகதி அடைந்துவிட்டார், இதைவிட வேறென்ன கேவலம் வேண்டும் என தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கடுமையாகச் சாடியுள்ளார்.

தமிழகத்தில் தற்போது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ள நிலையில், குறித்த பிரச்சார நடவடிக்கைகளின்போது ஈழத்தமிழர் தொடர்பான விவகாரங்களும் ஆங்காங்கே தேர்தல் பிரச்சார மேடைகளில் ஒலித்த வண்ணமே உள்ளன.

இந்நிலையில், தேர்தல் பிரச்சார மேடையொன்றில் கருத்துத் தெரிவித்த முதல்வர் பழனிச்சாமி, வைகோ கூட்டணிக்காகக் கொள்கையை விட்டுவிட்டார். கொள்கையும் கிடையாது கோட்பாடும் கிடையாது. இலங்கை குறித்துப் பேசிக்கொண்டிருந்த வைகோ இப்போது அதை விட்டுவிட்டார்.

இலங்கைத் தமிழர் படுகொலை பற்றி வாய் கிழியப் பேசிய வைகோ, இப்போது கைகட்டி, வாய்பொத்தி திமுக தலைவரிடம் சரணாகதி அடைந்துவிட்டார். இதைவிட வேறென்ன கேவலம் வேண்டும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

# வெளிநாட்டினர் ஊடுருவலை தடுக்காவிட்டால் மெக்சிகோ எல்லையை மூடுவேன் டிரம்ப் மீண்டும் மிரட்டல்




அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவி ஏற்றவுடன் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டார். மெக்சிகோ எல்லை வழியாக ஹோண்டுராஸ், கௌவுதமாலா, எல்சால்வேடர் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்தவர்கள் ஊடுருவுகின்றனர்.

அவர்களை தடுக்க மெக்சிகோ எல்லையில் சுவர் கட்ட தீவிர நடவடிக்கை எடுத்துள்ளார். சுவர் கட்டுவதற்கான செலவை மெக்சிகோ ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார். அதை ஏற்க அந்நாடு மறுத்து விட்டது. எனவே மெக்சிகோ எல்லையை மூடப் போவதாக மிரட்டல் விடுத்தார். இருந்தும் அந்நாடு பணியவில்லை. இந்த நிலையில் மெக்சிகோ எல்லையை மூடப்போவதாக மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து டொனால்டு டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு செய்து வெளியிட்டுள்ளார். அதில், அமெரிக்காவின் தென் பகுதியில் உள்ள அண்டை நாடுகளான ஹோண்டுராஸ், கௌவுதமாலா, மற்றும் எல்சால்வேடர் நாடுகளில் இருந்து மெக்சிகோ வழியாக சட்ட விரோதமாக ஊடுருவுகின்றனர்.

பல ஆண்டுகளாக எங்கள் செல்வத்தை அவர்கள் எடுத்து செல்கின்றனர். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனெனில் மோசமான சட்டங்கள் உள்ளன. எனவே, அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருபவர்களை தடுத்து நிறுத்தும்படி மெக்சிகோவிடம் உதவி கோரினோம். ஆனால் அதை மெக்சிகோ செய்யவில்லை. அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

எனவே மெக்சிகோ எல்லையை மூடுவோம் என மிரட்டல் விடுத்துள்ளார். டிரம்பின் இந்த கருத்தை மெக்சிகோ அதிபர் அன்ட்ரஸ் மானிவில் லோபெஷ் ஓபராய் மறுத்துள்ளார். இதன்மீது சில நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். எங்களால் முடிந்தவரை உதவி புரிந்து வருகிறோம்.

# அவுஸ்திரேலியா பப்புவா நியூகினியாவில் நிலநடுக்கம்




அவுஸ்திரேலியா அருகே பசிபிக்கடலில் உள்ள தீவு நாடு பப்புவா நியூகினியா, நேற்று அங்கு திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள நியூ பிரிட்டன் தீவு அதிரடியாக குலுங்கியது.

இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகள் மற்றும் அலுவலக கட்டிடங்களில் இருந்து வெளியேறினர். பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். அங்கு 6.1 ரிக்டரில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது. கான்டீரியன் கிழக்கே 186 கி.மீ தொலைவில் நியூபிரிட்டன் தீவை மையமாக கொண்டு நிலநடுக்கம் உருவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரம், உயிரிழப்பு மற்றும் காயம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. பப்புவா நியூகினியா பசிபிக் பிராந்தியத்தில் நிலநடுக்க அபாய பகுதியில் உள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

# இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ‘பிரெக்ஸிட்’ ஒப்பந்தம் மீது 4-வது முறையாக ஓட்டெடுப்பா? - தெரசா மே பரிசீலனை



ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் ‘பிரெக்ஸிட்’ நடவடிக்கையில் இழுபறி நிலை நீடிக்கிறது. 2016-ம் ஆண்டு நடந்த பொதுவாக்கெடுப்புக்கு பின்னர் பிரதமர் பதவிக்கு வந்த தெரசா மே, ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கையை தொடங்கினார்.

இதையொட்டி ஐரோப்பிய கூட்டமைப்புடன் அவர் ஒரு ஒப்பந்தம் போட்டார். இந்த ஒப்பந்தம் முதன்முதலாக இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் கடந்த சனவரி மாதம் வந்த போது வரலாற்று தோல்வியை சந்தித்தது. 230 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் தெரசா மேயின் அந்த ‘பிரெக்ஸிட்’ ஒப்பந்தம் தோல்வி அடைந்தது நினைவுகூரத்தக்கது. 15 நாட்களுக்கு முன்பாக 2-வது முறையும் ஒப்பந்தம் தோல்வியைத் தழுவியது.

இந்த நிலையில் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறிய பின்னர், இரு தரப்பினரிடையே சிறப்பு வர்த்தக உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கான ஒப்பந்தம், மூன்றாம் முறையாக இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தோல்வியை தழுவியது.

ஒப்பந்தத்தை ஆதரித்து 344 ஓட்டுகளும், எதிர்த்து 286 ஓட்டுகளும் விழுந்தன.


இது தெரசா மேயுக்கு தலைவலியாக உருவாகி உள்ளது.

ஒப்பந்தம் நிறைவேறி, ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறியதும் பதவி விலகுகிறேன் என அவர் உறுதி அளித்தும்கூட இந்த விவகாரத்தில் இங்கிலாந்து எம்.பி.க்கள் அவர் பக்கம் இல்லை என்பது நிரூபணமாகி உள்ளது. இந்த நிலையில் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகுவதற்கான ஒப்பந்தத்தை 4-வது முறையாக நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து ஓட்டெடுப்பு நடத்துவதற்கான வழிவகைகளை பிரதமர் தெரசா மேயும், மந்திரிகளும் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

நேற்று முன்தினம் ஒப்பந்தம் தோல்வியை தழுவிய பின்னர் பேசிய பிரதமர் தெரசா மே, இங்கிலாந்துக்கு மாற்றுவழி தேவைப்படுகிறது என கூறியது நினைவுகூரத்தக்கது.

எதிர்க்கட்சியான தொழிற்கட்சி தலைவர் ஜெரேமி கார்பைன், “ஒன்று தெரசா மே தனது திட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது அவர் உடனே பதவி விலக வேண்டும்” என வலியுறுத்தி வருகிறார்.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சியில் அதிருப்தி எம்.பி.க்கள் 34 பேரின் ஆதரவை பெறும் முயற்சியில் அரசு இதுவரை தோல்வியைத்தான் கண்டு வருகிறது. ஆனாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை எம்.பி.க்களின் ஆதரவை பெறுவதற்கு பிரதமர் தெரசா மே முயற்சிப்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து ஒப்பந்தம் இன்றி வெளியேறுவதை தவிர்க்கும் வகையில் பேச்சுவார்த்தையை நீட்டிப்பதற்கு தெரசா மேயுக்கு ஏப்ரல் 12-ஆம் திகதி வரை அவகாசம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# சீனாவில் வாயு கசிவால் தொழிற்சாலையில் வெடிவிபத்து; 7 பேர் பலி

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உலோக தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. இந்த தொழிற்சாலையில் திடீரென வாயு கசிவு ஏற்பட்டது. இதனால் அது வெடித்து சிதறியுள்ளது. இதில் 7 பேர் பலியாகினர். 5 பேர் காயமடைந்தனர். உடைந்த உலோகங்கள் சேமித்து வைக்கப்பட்டு இருந்த பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது. எனினும் வெடிவிபத்து ஏற்பட்டது பற்றி விசாரணை நடந்து வருகிறது.

இது கடந்த 10 நாட்களில் ஜியாங்சுவில் ஏற்பட்டுள்ள 2வது மிக பெரிய வெடிவிபத்து ஆகும். கடந்த மார்ச் 21ந்தேதி யான்செங் நகரில் உள்ள ரசாயன ஆலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 78 பேர் கொல்லப்பட்டனர்.


# பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகள்

தமிழர்களின் நுண்ணறிவு வியக்கத்தக்க ஒன்றாக அமைகிறது. இன்று வளர்ந்துள்ள பல அறிவியல் துறைகளின் வித்துக்கள் அன்றே இருந்தமைக்கான பல்வேறு சான்றுகளை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

வானியல், மண்ணியல், இயற்பியல், உயிரியல், பயிரியல், மருத்துவவியல், கட்டிடவியல் என பல துறைகளின் செய்திகளை எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம். தமிழர்கள் வானியல் அறிவு பெற்றிருந்தார்கள். இந்த உலகம் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகிறது. நிலம் மண்ணால் நிரப்பப்பட்டுள்ளது, நிலம் ஏந்திய விசும்பும், வான் என்ற விசும்பைச் சுற்றிய காற்று, காற்றை பரப்பும் தீயும், தீக்கு எதிரான நீரும் என ஐம்பூதங்களாய் கலந்தது என்ற வரையறையின் வழி புறநானூற்று பாடல்களிலேயே பஞ்சபூதங்களின் சேர்க்கையே இவ்வுலகம் எனக் கூறுகிறது. இதனுள் ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கைச் சிந்தனைக் கூறுகள் இருப்பதைக் காணலாம். ஆண்டினை கார்காலம், கூதிர்காலம், இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி என ஆறு வகையாக பிரித்தனர். நாளினை யாமம், வைகறை, விடியல், காலை, ஏற்பாடு, மாலை என ஆறு வகையாக பிரித்தனர். இவை பழந்தமிழரின் காலம் பற்றிய கூர்மையான அறிவு பற்றிய வெளிப்பாடாகும். மேலும் வானில் உலவும் கோள்கள் பற்றியும் குறித்துள்ளனர். கதிரவன் பற்றியும், சூரியன் பற்றியும், செம்மீன் என்ற செவ்வாய் கோள் பற்றியும் செய்திகள் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன.

அமாவாசை, பவுர்ணமி என இன்று குறிக்கப்படுவதினை தமிழர்கள் அன்று வெள்உவா என்றால் பவுர்ணமி என்றும் கார்உவா என்றால் அமாவாசை என்றும் குறித்தனர். இவையெல்லாம் பழந்தமிழரின் வானியல் நுட்பத்தினை எடுத்துரைக்கிறது. மேலும் நிலம் பற்றியும், நீர் பற்றியும், அதன் இன்றியமையாமை பற்றியும் பழந்தமிழ் நூல்கள் செப்புகின்றன. நிலம், நீர் இணைவே உணவு, உணவே உயிர்களின் அடிப்படை என்ற உயரிய தத்துவம் குடபுலவியனார் என்ற புலவர் புறநானூற்றில் கூறுகிறார்.

மேலும் செம்மண்ணிலே வீழ்ந்த தண்ணீர் எவ்வாறு சிவப்பான நிறத்தை பெறுகிறதோ, அதைப்போல காதலரும் நானும் இணைந்தோம் என்ற புகழ் பெற்ற சங்கப்பாடலில் தண்ணீர் நிறமற்றது அதை எந்த மண்ணைச் சார்கிறதோ அந்த நிறம் பெறும் என்ற அறிவியல் உண்மையை காதல் பாடல் வழி எடுத்துரைத்துள்ளனர். உலகத்தின் இயல்புகளை தமிழர்கள் அறிந்திருந்தனர்.



இன்றைய இயற்பியலில் குவாண்டம் என்ற கொள்கை நவீன இயற்பியல் கொள்கை அறிஞர் நலங்கிள்ளி என்ற அறிஞர் மெக்கானிக்கல் யுனிவர்ஸ் என்ற நூலினை இயந்திர அண்டம் என மொழிப்பெயர்த்துள்ளார். குவாண்டம் என்ற சொல்லுக்கு ‘அக்குவம்’ என தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அக்கு அக்காக ஒளி உமிழப்படுவதை அக்குவம் எனக் கூறியுள்ளார். குவாண்டம் என்ற சொல்லை விடவும் கூட அறிவியல் துல்லியம் வாய்ந்தது இச்சொல் என தமிழரின் அறிவினை வியக்கிறார்.


வானியல் அண்டவியல் அறிவு இருந்தமைக்கான பல சான்றுகள் கிடைக்கின்றன. அண்டப்பெருவெளியில் உருண்டைப் பெருக்கம் அளப் பெரும் தன்மை வளப்பெறும் காட்சி என திருநாவுக்கரசர் செப்புகிறார். அண்டம் என்ற பெருவெளியில் உருண்டையான கோள்களின் காட்சி அளவிட முடியாத வளமான காட்சியாக விளங்குகிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. பழந்தமிழரின் அறிவியலில் உயிரியல் பற்றி மிகச் சிறப்பாக அறிந்திருந்தனர். தொல்காப்பியர் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் எனப் பாகுபாடு செய்திருப்பது இன்றைய தாவரவியல் சிந்தனைகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன.

ஓரறிவுயிர் தொடுதல் உணர்வுடையவை தொட்டாச்சிணுங்கி, புல் போன்றன. இரண்டு அறிவு தொடுதல் உணர்வுடன் நாவினால் சுவைத்தல் உடையவை. அவை கிளிஞ்சல்கள், சங்கு, நத்தை, சிப்பி, போன்றன. மூன்றாவது அறிவுடையவை தொடுதல் நாவினால் உண்டாகும் சுவையுடன், மூக்கினால் மோந்து பார்த்தல் இவை செல், ஈசல், பட்டுப்பூச்சி, போன்றன. இவை ஓசையிட்டாலும் அந்த இடத்தை விட்டு நகர்வதில்லையே ஏனென்றால் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் அதற்கு செவியில்லை என விளக்கம் தருவது அவரின் நுண்ணறிவினைக் காட்டுகிறது. நாலறிவுயிர் தொடுதல், நாவின்சுவை, மூக்கால் உணர்தல் கண்ணால் காணுதல் வண்டு, குளவி போன்ற இனங்களைக் குறிக்கின்றார். ஐந்தறிவுயிர் மேலே கூறிய நான்கு உணர்வுடன் செவிஉணர்வு சேருவது இவை விலங்குகள் பறவைகள், மீன், முதலை, ஆமை போன்றவை. மேற்சொன்ன இந்த ஐந்தும் சேர்ந்து மனம் என ஒன்றுபட்டு சிந்திக்கின்ற அறிவு பெற்றவர்களையே தொல்காப்பியர், ஆறறிவுடையவர் மாந்தர் என வகைப்படுத்துகிறார். தொல்காப்பியரின் அறிவியல் பார்வை அறிவியல் அடிப்படையில் உயிரினங்களை ஆறாகப் பிரித்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

மேலும் தாவரங்களை வகைப்படுத்தும் போது வயிரம் பாய்ந்த வன்மையான தாவரங்கள், வயிரம் பாயாத வன்மையான தாவரங்கள் என வகைப்படுத்துகின்றார். மூங்கில், வாழை, தென்னை, பப்பாளி, ஈச்சம் போன்ற மரங்கள் வேர்கள் அதிகம் பரவாமல் உள்வெளி வெற்றிடமாக இருக்கும் என்பதை விளக்குகின்றார். வேம்பு, மா, பலா, அரசு, ஆல் போன்ற மரங்கள் உள்ளே வயிரம் பாய்ந்த மரங்கள் எனப்பிரிக்கிறார். இதையே அகக்கால் புறக்கால் என விளக்குவது பழந்தமிழரின் அறிவியல் அறிவினைச் செப்புகிறது. மேலும் ஊர்வன, பறப்பன, ஆண்பால் பெயர் பெறும் விலங்குகள், பெண்பால் பெயர் பெறும் விலங்குகள் என விளக்குவது அறிவியல் திறன் சார்ந்ததாக அமைகின்றது.

பழந்தமிழரின் மருத்துவவியல் வியக்கத்தக்க ஒன்றாக இன்றும் அறியப்படுகிறது. இன்றைய அறுவைசிகிச்சைக்கான குறிப்பு அன்றே குழந்தை இறந்து பிறந்தால் வாளால் கீறிப் புதைக்கும் வழக்கம் தமிழரிடையே இருந்துள்ளது. மேலும் தமிழர்கள் உணவே மருந்து மருந்தே உணவு என வாழ்ந்தார்கள். அறிவியல் கண்டுபிடிப்புகள் சக்கரம் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். சக்கரங்களைக் கொண்டு மட்பாண்டங்களை வளைந்த குயவனின் சிறப்பை கலங்களை உருவாக்குகின்ற குயவனே என புறநானூற்றில் ஒரு மன்னனை அடக்கம் செய்யும் தாழியினை அளவு தொடர்பான செய்தி கூறப்பட்டுள்ளது. தச்சுத் தொழிலும், மட்பாண்டத்தொழிலும் தமிழரிடையே சிறந்திருந்தது. கட்டிடவியல், சிற்பக்கலை போன்றவற்றில் தமிழரின் அறிவியல் கூறுகளை காணலாம்.

# பூமியை காக்கும் பின்லாந்து



‘உலகம் சூடாகி வருவது என்னவோ உண்மைதான். ஆனால், அது இயற்கையாக ஏற்படுவது என்று ஒரு சிலர் சொல்ல, ‘அப்படி அல்ல... இது மனிதன் ஏற்படுத்திய வெப்பம்தான்‘ என்று சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் ஆதாரப்பூர்வமாக நிரூபித்து வருகிறார்கள்.

‘குளோபல் வார்மிங் என்ற பிரச்சினை இல்லவே இல்லை‘ என்று சொல்வோரும் உண்டு. ‘கிரீன் ஹவுஸ் கேசஸ்‘ எனப்படும் வெப்ப வாயுக்களை தொழிற்சாலை மற்றும் வாகனங்களின் மூலம் வானில் ஏவுவது, எண்ணெய் கிணறுகளிலிருந்து எரியும் இடை விடாத தீ ஆகியவை, உலகின் நுரையீரல் என்று சொல்லப்படும் அமேசான் காடு உள்பட பல காடுகளை வேகமாக அழிப்பது போன்ற பல மோசமான காரியங்களால் பூமியின் குளிர்நிலையை சமன் செய்யக்கூடிய துருவப் பிரதேசங்களின் பிரமாண்டமான பனி அடுக்குகள் உருகி வருகின்றன. இதனால் உலகின் வானிலை ஏடாகூடமாக மாறி வருகிறது. கிளிமஞ்சாரோ, இரியன் ஜெயா, பியூஜி, இமயமலை போன்ற பனிமலைகளும் வேகமாக உருகி வருவது கவலைக்குரியது. இதன் முதல் விளைவு... அதிக மழை, புயல், வெள்ளம் போன்றவை. அதற்கு பின்னால் வறட்சியும் கடுமையாக பாதிக்கும். சுருக்கமாக சொன்னால் குறுகிய குளிர்காலம், நீண்ட கோடை என்பதுதான் குளோபல் வார்மிங் தரப்போகும் தண்டனை.

இப்போது நிஜமாகவே பூமியை காத்து வருவது பின்லாந்தின் பனி அடுக்குகள்தான். அவையும் உருக ஆரம்பித்தால் பூமித்தாயின் கோபத்தை நம்மால் தாங்க முடியாது. உலகிலேயே அதிகமான வெப்ப வாயுக்களை வெளியேற்றும் நாடு அமெரிக்கா. உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட மறுத்து வரும் நாடும் அதுதான். அமெரிக்கா எப்போதுமே அப்படி அடாவடிதான் செய்கிறது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.